# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2008
ஆடி 5
ஷஃபான் பிறை 3
புதன் (20—7—1977)
நிறுவியது. 1947
புத்தகம் 31
இதழ் 15
தொலைபேசி: 23411
விலை சதம்: 60





## தமிழ் ஈழம் மலர கூட்டணிக்கே வாக்களிப்பீர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமிர்தலிங்கம் தலைமையில் பொதுமேடை விவாதம்;

# குமார் பொன்னம்பலமும் சிவசிதம்பரமும் மோதுகிருர்கள்

(தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவரான திரு. மு. சிவசிதம்பரம் தமக்குக் 'கூட்டணி நியமனம்' தருவதாகச் சொல்லி கடைசியில் ஏமாற்றிவிட்டதாகவும், அதுபற்றியும் தமது தகுதி குறித்தும் பொதுமேடை ஒன்றில் அவரோடு தாம் வாதிடத் தயாராக இருப்பதாகவும், அதற்குக் கூட்டணியின் மற்ருெரு செயலதிபரான திரு. அ. அமிர்தலிங்கமே தலைமை தாங்க வேண்டும் என்றும் திரு. குமார் பொன்னம்பலம் அறிவித்திருந்தார் அல்லவா? திரு. குமார் விரும்பியது போன்றே பொதுமேடை அமைக்கப்பட்டு விவாதம் நடைபெற்ருல், அது எப்படியிருக்கும் என்பதை கற்பனை செய்து இதனை எழுதியிருக்கிறேன்.)

அமிர்:- (தலைமையுரை) நண்பன் சிவசிதம்பரம் அவர்களே! தம்பி குமார் அவர்களே! இந்த முற்ற வெளி மைதானத்தில் வெள்ளம்போல் திரண்டிருக்கின்ற தமிழர் கூட்டமே! வணக்கம்.

தம்பி குமார் இன்றைய தினம் என்னை ஓர் இக்கட்டான நிலைமைக்குள் கொண்டுவந்து மாட்டியிருக்கிருர். இந்த விவாத மேடையை நடுநிலைமையில் நின்று எவரும் குறை சொல்லமுடியாதபடி நடாத்தி முடிக்க இறைவன் தான் எனக்குத் துணைபுரிய வேண்டும் என்று அவனை வேண்டுகின்றேன். நான் இப்பொழுது எதுவும் பேச விரும்பவில்லை. தேவைப்பட்டால் முடிவுரையாகப் பின்னர் சில கருத்துக்களைச் சொல்வேன். இப்பொழுது தம்பி குமார் தமது வாதத்தை ஆரம்பிப்பார்....

குமார்:- தலைவர் அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களே! சிவசிதம்பரம் அவர்களே! பொது சனங்களே! வணக்கம்.

உலகத்திலேயே தலைசிறந்த சட்ட மேதையும், இராணி அப்புக் காத்துவும், ஐ. நா. சபையில் தமிழன் புகழைப்பொறித்தவரும், 'ட்ரயல்—அட்—பார்' வழக்கின் வெற்றிக்குக் காரணமாக இருந்தவரும், தனிப்பெருந்தலைவருமான அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் மகன் நான்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்படியான எனக்கு தேர்தலில் போட்டியிட கூட்டணி டிக்கட் கிடைக்கவில்லை என்ருல் அது எவ்வளவு அநியாயம்—அக்கிரமம் — நன்றிகெட்ட செயல் என்பதை எண்ணிப் பாருங்கள்.

தந்தையின் மறைவுக்குப் பின்னர் —அவருக்குக்கொடுக்கவேண்டிய இடத்தை நிச்சயம் எனக்குத் தருவார்கள் என்ற நம்பிக்கையில், பருத்தித்துறைத் தொகுதியில் என்னை அபேட்சகஞக நிறுத்தும்படி கோரி கூட்டணியிடம் விண்ணப்பித்திருந்தேன். அதற்கு நான் முற்றிலும் தகுதியானவன் என்பதை விளக்குகின்றேன். முதலாவது, ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, நான் அப்பாவின் மகன் ...(மக்களின் சிரிப்பொலி) இரண்டாவது, எனது தந்தையாரின் தகனக் கிரியைகள் நடைபெற்றதும் எங்கள் குடும்ப மயானம் இருப்பதும் பருத்தித்துறைத் தொகுதியில்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள்... (சிரிப்பொலி) மூன்ருவது, நான் துரைரத்தினத்துக்கு முன் சட்டத்தரணியானவன் — அவரைவிட அதிக வழக்குகளிலும் பெரிய வழக்குகளிலும் அரசாங்கமொழியாகிய சிங்கள மொழியில் பேசியவன்— பேசிக்கொண்டிருப்பவன் — பேசப்போகிறவன்... (சிரிப்பொலி) நாலாவதாக, துரைரத்தினம் நினைத்தும் பார்த்திராத அளவில்பெருந்தொகைப் பணத்தை நான் தேர்தல் செலவுகளுக்காக வைத்திருந்தவன்... (பலத்த சிரிப்பொலி) ஐந்தாவதாக, எனக்கு டிக்கட் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், அப்பாவின் மறைவுக்குப் பின் பருத்தித்துறைத் தொகுதியில் குடியேறி தேர்தல் பிரசாரங்களையும் ஆரம்பித்தவன்...

இத்தனை தகுதிகள் இருந்தும், எனக்குப் பருத்தித்துறை கிடைக்க வாய்ப்பில்லை என்று தெரிந்ததும், யாழ்ப்பாணத்தொகுதியைக் கேட்டேன் எனது ஆதரவாளர்கள் மூலமாகவும் வற்புறுத்திப் பார்த்தேன். என் போன்றவர்களுக்கு டிக்கட் கிடைக்காவிட்டால் தமிழ்க் காங்கிரஸ் கூட்டணியிலிருந்து வெளியேறி, புதுக்கட்சி ஆரம்பிக்கப்படும் என்றும் அறிவித்தேன்.

யாழ்ப்பாணத் தொகுதியில் நிற்பதற்கும் எனக்குத் தகுதியுண்டு என்பதை விளக்குகின்றேன். ஒன்று— எனது தந்தையாரை இரு தடவை காலை வாரிவிட்ட நன்றிகெட்ட தொகுதி

## "போனுச் சானு"

யாழ்ப்பாணத் தொகுதியென்ருலும் பலமுறையும் இத்தொகுதியிலேயே தேர்தலுக்கு நின்றவர். இரண்டு, தந்தையின் பூதவுடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக யாழ்ப்பாணத் தொகுதியிலுள்ள வீரசிங்கம் மண்டபத்திலும் தமிழர் கூட்டணி அலுவலகத்திலும் வைக்கப்பட்டதை நீங்கள் அதற்கிடையில் மறந்திருக்க மாட்டீர்கள் என நினைக்கிறேன். இவைகளைவிட நான் ஏற்கனவே துரைரத்தினத்துக்குச் சொன்ன காரணங்கள் அத்தனையும் யோகேஸ்வரனுக்கும் பொருந்தும் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

பருத்தித்துறையும் கிடையாதுயாழ்ப்பாணமும் கிடையாது என்று தோன்றவே 'எனது பரிதாப நிலையை' விளக்கி நியாயம் கேட்டு வரும்படி மம்மியைத் தூதனுப்பினேன். மம்மி சிவசிதம்பரத்தைக் கண்டு பேசியபோது அவர் 'ஆகட்டும் பார்க்கலாம்' எனச் சொல்லி அனுப்பினுர்.

கடைசியாக சிவசிதம்பரம் என்னைச் சந்தித்து 'வட்டுக்கோட்டையில் அபேட்சகஞக நிற்க விருப்பமா?' என்று சம்மதம் கேட்டு நான் ஒப்புக்கொண்டேன். இறுதியில் என்ன நடந்தது? நியமனக்குழுவின் அறிக்கையைப் பார்த்து நான் ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்தேன். நான் ஏமாற்றப்பட்டேன்... எனக்கு நம்பிக்கை மோசம் செய்துவிட்டார்கள்... எந்தத் தொகுதியிலும் எனக்கு இடமில்லை... (அழுகிருர்) இதற்கெல்லாம் சிவசிதம்பரமே காரணம்... அப்பா இருந்தால் இப்படியெல்லாம் நடக்குமா? நான் அப்பா இல்லாத அனதையாகிவிட்டேன். (அழுகிருர்) எனது தகுதிகள் எதுவும் இவர்களுக்குத் தகுதியாகப் படவில்லையாம்... தமிழ்க் காங்கிரசால் வளர்ந்த சிவசிதம்பரம் காங்கிரஸ் காரணுகிய எனக்கு இப்படி நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா? இப்பொழுது நான் கூட்டணி மீது பத்துக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்த விரும்புகின்றேன்...

அமிர்:- அதற்கெல்லாம் இங்கே இடம்தர முடியாது. இது அந்த நோக்கத்துக்காக அமைக்கப்பட்ட மேடையல்ல.

குமார்:- நான் பேசியே தீருவேன். என்னை யாரும் தடுக்கமுடியாது...

அமிர்:- அப்படியாஞல் அதன் விளைவையும் நீர் ஏற்க வேண்டும். கூட்டணி பற்றிய உமது குற்றச்சாட்டுகளுக்கும் நண்பன் சிவசிதம்பரம் பதிலளிக்கவேண்டியிருக்கும்...

(தலைவரைப்பொருட்படுத்தாது குமார்தொண்டமானின் தலைமை, பொதுசன வாக்கெடுப்பு, புத்தளம் தமிழ் ஈழமா? காசி ஆனந்தன் தியாகியா? போன்ற விவகாரங்களை வைத்துகூட்டணி மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்திப் பேசிக் கொண்டிருக்கிருர்...)

அமிர்:- அடுத்து, தம்பி குமாரின் வாதங்களுக்கு நண்பன் சிவசிதம்பரம் பதிலளித்துப்பேசுவார்.

சிவா:- நண்பன் அமிர்தலிங்கம் அவர்களே! தம்பி குமார் அவர்களே! சகோதர சகோதரிகளே! வணக்கம் நான் அதிக நேரத்தை உங்களிடமிருந்து எடுக்கவிரும்பவில்லை. அதற்கு அவசியமுமில்லை. வாதத்துக்குப் பதிலளிக்க அதிக நேரத்தைச் செலவிடலாம். விதண்டா வாதத்துக்குப் பதிலளிக்க அதிக நேரம் தேவைப்படாது... (கைதட்டல்) எனக்குப் பத்து நிமிடங்களே போதும்.

உலகப் புகழ்பெற்ற சட்ட மேதையின் மகனுக்கு அந்த ஒரு தகுதியை வைத்தே நியமனம் கேட்டவருக்கு ஒழுங்காக விவாதிக்கத்தெரியவில்லையே— முடியவில்லையே என்பதை அறிந்து நான் வெட்கப்படுகிறேன். (கைதட்டல்)

சிலர் தம் தந்தையின் புகழுக்கு அவரது மறைவுக்குப் பின்னும் பெருமைசேர்ப்பார்கள் உதாரணம் தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசன் ... (பலத்த கைதட்டல்) ஆஞல் இவரோ தமது செய்கையாலும் நடத்தையாலும் அமரர் ஜீ. ஜீ.யின் பெருமைக்குக் களங்கத்தை உண்டு பண்ணி வருவதையிட்டு நான் மிகுந்த வேதனையடைகிறேன் நண்பர்களே வேதனையடைகிறேன் ... (கைதட்டல்)

துரைரத்தினத்தைவிடச் சிறந்த வழக்கறிஞராம் — அதிக வழக்குகள் பேசியவராம்—பணக்காரனும் — இப்படியெல்லாம் காரணங்கள் சொல்லப்பட்டன. ஆஞல் நண்பர்களே, இந்தத் தகுதிகளையல்ல நியமனக் குழு பரிசீலனை செய்தது. தமிழர்விடுதலைக்கூட்டணி ஒரு விடுதலை இயக்கம் அதிலேபோட்டியிட்டு நாடாளுமன்றம் செல்வோர் தியாகங்கள் செய்யத் தயாராக இருக்க வேண்டும். இரத்தம் சிந்தவும் சிறைசெல்லவும் சித்திரவதைக்குள்ளாகவும் ஏன் சொத்துகள் பறிமுதலுக்கு உள்ளாகவும் கூட தயாராக இருக்கவேண்டும், இதற்கெல்லாம் துரைரத்தினம் தயாராக இருக்கிருர். தம்பி குமார் தயாரா...? (கைதட்டல்). அப்படி வளர்ந்தவரல்லவே அவர் ...? கைதட்டல்)

பருத்தித்துறை இல்லாவிட்டால் யாழ்ப்பாணம் தந்திருக்கலாமே என்கிருர். ஆஞல்யோகேஸ்வரனுடைய தகுதிக்கு முன் தம்முடைய தகுதி எடுபடாது என்பதை இவரே உணர்ந்துவிட்டதால் அன்ருே யாழ்ப்பாணம் கேட்டு இவர் விண்ணப்பமே அனுப்பவில்லை. (கைதட்டல்)

மம்மியைத் தூதனுப்பிஞராம். இவருக்கு நியமனம் கிடைக்காது — கிடைக்க நியாயமில்லை — அதற்கான தகுதி தம்மிடமில்லை என்பது இவருக்கே தெரியும். அதஞல்தானே குறுக்கு வழியில் அதனைப்பெறத் தாயாரைத் தூதனுப்பியிருந்தார். (கைதட்டல்)

'வட்டுக்கோட்டையில் நிற்க விருப்பமா?' என்று நான் கேட்டதாகக் குறிப்பிட்டார். அதற்கு, 'வட்டுக்கோட்டை நிசசயம் கிடைக்கும்' என்று இவரை யார் அர்த்தம் செய்யச்சொன்ஞர்கள்? இவரது கருத்தை சம்மதத்தை அறிந்து கொண்டு நியமனக்குழுவில் அதுபற்றி ஆராய்ந்தோம். முடிவு, இவருக்குச் சாதகமாக இருக்கவில்லை. அதிலே அப்படி என்ன பெரிய நம்பிக்கைத் துரோகத்தைக் கண்டுவிட்டார்...? (கைதட்டல்)

அன்பர்களே, இவர் உண்மையில் ஓர் இலட்சியவாதியல்ல சந்தர்டபவாதி என்பது உங்களுக்கு இப்பொழுதாவது தெரிகிறதா?...('ஆம் இவர் ஒரு சந்தர்ப்பவாதி தான்' என்ற குரல்கள்)

கூட்டணி நியமனம் இவருக்கு மட்டுமா கிடைக்கவில்லை? இயக்கத்துக்காகத் தம்மையை அர்ப்பணித்து உழைத்து வருகின்ற ஆலால சுந்தரம், நடராசா, விசுவநாதன், ஜெயக்கொடி, நேமி

—7-ம் பக்கம் பார்க்க

## 'விடுதலையா? அடிமைத்தனமா?'

1977-ம் ஆண்டு நடைபெறப் போகும் பொதுத் தேர்தல் தமிழ்த் தேசிய இனத்தின் சரித்திரத்தில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒன்ருகும், இத்தேர்தல், தமிழ்ப் பிரதேசத்தைப் பொறுத்தவரை, தமிழ்த் தேசிய இனத்தின் ஒரே அரசியல் இயக்கத்திற்கும் அவ்வினத்தை அடக்கி ஆளும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெறும் மோதலே ஆகும், சிங்களப் பிரதேசத்தில் நடைபெறும் தேர்தல் ஆட்சியை எந்தக்கட்சியின் கையில் ஒப்படைப்பது என்பதை நிர்ணயிக்க நடைபெறுகின்றது. தமிழ் ஈழத்தில் நடைபெறும் தேர்தல் விடுதலையா? தொடர்ந்தும் அடிமைத்தனமா? என்பதை நிர்ணயிப்பதற்கே நடைபெறுகின்றது, அதைத் தீர்மானிப்பதற்கே தமிழர் விடுதலை கூட்டணி தேர்தலைப் பயன்படுத்தப் போகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழன்பன்,
பருத்தித்துறை

கே:- நீண்ட காலமாகத் தேர்தலில்போட்டியிட்டு தோற்றவர் என்பதற்காக இரக்கப்பட்டு அனுதாபத்துக்காக சுயஇச்சைகள் யாருக்காவது வாக்களிக்கலாமா?

ப: ஒருபோதும் கூடாது. அப்படிச் செய்வது தமிழன் தனது சவக்குழியைத்தானே தோண்டுவது போன்றசெயலாகவேயிருக்கும். இப்படித்தான், 'தாலிப்பிச்சை'க்கு இரங்கி, அனுதாபப்பட்டு நல்லூர்த் தொகுதி மக்கள் அருளம்பலத்தை 1970தேர்தலில் அனுப்பிவைத்தனர். பின்னர் நடந்த துரோக நிகழ்ச்சிகள் தான் தெரியுமே! தமிழினத்துக்கு அருளம்பலம் சவக்குழி தோண்டினார். நல்லூர்த்தொகுதி மக்களால் கடந்த ஏழு ஆண்டுகளாக இரத்தக் கண்ணீர் வடிக்கமுடிந்ததே தவிர வேறு எதுவும் செய்யமுடியவில்லை. 1970ல் விட்ட தவற்றை ஏழு ஆண்டுகள் கழித்து நாளைதான் அவர்கள் திருத்த இருக்கிறார்கள். அதே தவறை தமிழினம் தனது சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் வேறு ஏதாவது ஒரு தொகுதி விடுமானால் —தமிழினத்தின் விடுதலைப் போராட்டம் சாண் ஏற முழம் சறுக்கிய கதையாகவே முடிந்துவிடும். எனவே இத்தேர்தலில் அனுதாபத்துக்காக வாக்குகளை விரயம் செய்வது என்ற சிந்தனைக்கே இடம் வைக்கக் கூடாது.

ஃ

கே: உடுப்பிட்டித்தொகுதியில் இராசலிங்கம்வெற்றி பெறுவாரா?

ப: பிரமிக்கக்கூடிய வகையில் 10,000 பெரும்பான்மை வாக்குகளால் பெருவெற்றி பெறுவார். இதுகாலவரை சமதர்மம்,சமத்துவம்பேசியவர்கள் எல்லாம், சாதியுணர்வைத் தூண்டிவிட்டாவது பாராளுமன்ற பதவியை பிடித்துவிடலாமென்ற நப்பாசையில், தங்கள் சமதர்மச் சட்டையை கழற்றி வைத்துவிட்டு "மூன்று தலைக்கழுதைகளாக" தேர்தலில்போட்டியிடுகிறார்கள். பதவிக்காக இலட்சியத்தை காலடியில்போட்டு மிதித்துவிட்ட சந்தர்ப்பவாதிகளை உடுப்பிட்டி தொகுதி மக்கள் நாளைய தினம் தங்கள் வாக்குச் சீட்டினால் விரட்டியடிக்கவிருக்கிறார்கள். தமிழ் ஈழ வரலாற்றில் ஒரு பெருமை வாய்ந்த இடத்தை உடுப்பிட்டித்தொகுதி ஈட்டிக்கொள்ளவிருக்கிறது.

ஃ

இ. ராஜேந்திரம்
கொழும்பு-13

கே: பண்டிதர்இரத்தினத்துக்கும், சுயாட்சி நவரத்தினத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: எல்லாம் தமிழிற் செய்து, தமிழ்மொழியை ஆத்மார்த்த பூர்வமாக நேசிப்பவர் — வளர்ப்பவர் — பண்டிதர்; ஆங்கிலமோகத்தில் இருந்து இன்னும் விடுபடாதவர் நவரத்தினம்! 1972ம் ஆண்டு சிங்கள குடியரசு அரசியற் சட்டம்வந்தநாள் முதல்தமிழீழவிடுதலைபோர்க்களத்தில் நிலைத்து நிற்பவர் பண்டிதர்; இந்தக்காலகட்டத்தில்இங்கிலாந்து சென்று சாய்வு நாற்காலியில் ஒய்வு எடுத்துக் கொண்டு அங்கு கூட்டணியை குறை சொல்லிக் கொண்டிருந்தவர் நவரத்தினம்; தந்தை செல்வாவின் தலைமையையேற்று அடிபிசகாது வழி நடந்துவருபவர் பண்டிதர் இரத்தினம்; தந்தை செல்வாவின் தலைமையை நிராகரித்து, அதைக் கிண்டல் செய்தவர் நவரத்தினம்; தனிநாடு தடைச் சட்டத்தை மீறி தனிநாடு தீர்மானத்தை அச்சிட்டு விநியோகித்து கைதாகி 20 ஆண்டு சிறைத் தண்டனையை ஏற்கவும் சொத்துக்களை இழக்கவும் தயாராக இருந்தவர் பண்டிதர் இரத்தினம்; தனிநாடு த்டைச் சட்டம் வந்தபோது வாய் மூடி ஊமையாகிக் கிடந்தவர் நவரத்தினம்; பண்டிதர் இரத்தினம் செயலில் வீரர்; நவரத்தினம் குறை சொல்வதிலும் 'புறணி' அளப்பதிலும் வல்லவர்; நவரத்தினம் அரசியலில் ஒரு பட்டமரம்: பண்டிதர் இரத்தினம் கிளை விட்டுப் பரந்து தமிழினத்தை தாங்கிநிற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியெனும் பாரிய ஆலமரத்தைத் தாங்கி நிற்கும் பலம் வாய்ந்த விழுதுகளில் ஒருவர்!

கே: யாழ் தொகுதியில் போட்டியிடும் யோகேஸ்வரன் அவர்களைப்பற்றி சில வரிகள்...?

ப: தமிழினத்தின் பெருந் தலைவர்களாக விளங்கிய அமரர் தந்தை செல்வா, ஜீ. ஜீ. போன்றவர்களிடம் முறையாக அரசியல் பாடம் பயின்றவர்; இங்கிலாந்தில் மாணவனாக இருந்தபோது தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வந்த காலஞ் சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயகாவை லண்டன் விமான நிலையத்தின் பின் வாசல் வழியாக ஒடவைத்தவர். இப்போதைய பிரதமர் சிறிமா பண்டாரநாயகாவுக்கும் லண்டனில் கறுப்புக் கொடி பிடித்து கதிகலங்க அடித்தவர்; நிதானமும் நேர்மையும் நிறைந்தவர்; துடிப்புள்ள இளைஞர்; தமிழ் இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம்; ஏழைகளின் தோழர்; தலைசிறந்த பண்பாளர்!

ஃ

இ. இராமலிங்கம்
கொழும்பு 8.

கே: தேசிய அரசுப் பேரவைக்கு போகாமல், தனிநாடு அமைக்கவேண்டுமென்றும்—அப்படிச் செய்வதாக கூட்டணி வாக்குறுதியளித்தால் தான்தேர்தலிலிருந்தே ஒதுங்குவதாகவும் கூறுகிறாரே சுயாட்சி நவரத்தினம்?

ப: கூட்டணியுடன் சேர்வதுபற்றி திரு. நவரத்தினம் பேச்சுவார்த்தை நடத்தியபோது, மேற்கண்ட நிபந்தனையை—அதாவது தேசிய அரசுப் பேரவைக்கு கூட்டணி போவதா இல்லையா என்ற கொள்கைப் பிரச்சினை எதையும் நவரத்தினம் முன்வைக்கவில்லை; அவர் முன்வைத்தது சுயாட்சிக் கழகத்துக்கு இரண்டு தேர்தல் தொகுதிகளை கூட்டணி விட்டுக்கொடுக்க வேண்டும் என்ற ஒரேஒரு கோரிக்கையையே; அப்படி கூட்டணி இரு தொகுதிகளை சுயாட்சி கழகத்துக்கு கொடுக்கச் சம்மதித்திருந்தால் — இன்று தேசிய அரசுப்பேரவைக்கு போவதா இல்லையா என்ற பிரச்சினையையே நவரத்தினம் தொட்டிருக்கமாட்டார்!தனக்கு மூக்குப்போனாலும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு சகுனப் பிழையாக வேண்டும் என்பதே நவரத்தினத்தின் ஒரே இலட்சியம்; நவரத்தினத்தின் இந்த சுயநலப்போக்கு கொள்கை வைரம் பாய்ந்த காவலூர் தொகுதி மக்களிடம் அறவே எடுபடாது! இதை அறிந்துதான் சென்றதேர்தலில் அவரை ஊர்காவற்றுறை மக்கள் நிராகரித்தார்கள்.

கே: 'தினசதி' பத்திரிகையின் பிரசாரத்தில் தமிழ்மக்கள் ஏமாறுவார்களா?

ப: அப்படி ஏமாறுபவர்களாக இருந்தால் —1970ம் ஆண்டுப்பொதுத்தேர்தலின் போதே தமிழரசுக்கட்சி அழிந்திருக்கும். தமிழின விரோத தினசதியின் முகமூடி கிழிக்கப்பட்டுவிட்டது. இனவெறிபிடித்த யூ.என்.பீ. யின் ஊதுகுழல் தான் தினபதி என்பது இப்போது வெட்ட [illegible] தக் கழிசறை ஏடு எதை எழுதினாலும், தமிழினம் அதன் மீது காறியுமிழுமே தவிர— ஒரு நாளும் ஏமாறப்போவதில்லை. இதை நாளையதேர்தல் முடிவுகள் நிச்சயம் காட்டும்!

கே: தமிழர் கூட்டணிக்குள் வடக்கு கிழக்கு பிரதேச துவேஷம் இருப்பதனாலேயே தங்கத்துரைக்கு நியமனம் கிடைக்கவில்லையென்று தினசதி நாள்தோறும் துவேஷ வாந்தியெடுக்கிறதே?

ப: அப்படியானால் நியமனம் கிடைத்த சம்பந்தன் என்ன யாழ்ப்பாணத்தவரா? அவரும் கிழக்கு மாகாணத்தவர்தானே? இத்தகைய முடைநாற்றமெடுக்கும் பொய்ப் பிரசாரங்களால் தினசதியார் ஒன்றுபட்ட தமிழினத்தை பிரித்துவிட முடியாது; தங்கத்துரை நியமனம் கிடைக்காதபோது கூட்டணியைவிட்டுப் பிரிந்துவிடுவார்; அவரை வைத்துக் கொண்டு குட்டை குழப்பி தமிழினத்தைப் பிரதேச ரீதியாக பிரிக்கலாம் என்று எதிர்பார்த்திருந்த தினசதியாரின் எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டார் கொள்கை வீரர் தங்கத்துரை — இப்போது எதையாவதுகூறி தமிழினத்தை கூறுபோட முயலும் தினசதியாரின் பச்சைத் துரோகத்துக்கு கிழக்கு மாகாண மக்கள் ஒருபோதும் பலியாக மாட்டார்கள்!

கே: மசூர்மவ்லானா ஏதோ கூறுகிறாரே?

ப: பாவம், வயிற்றுபிழைப்புக்காக பச்சை மேடையில் கூலிக்கு மாரடிக்கிறார்; அரசியலில் ஒரு கோமாளி அவர். இவரது பச்சோந்தித் தனத்தை சரியாக அன்றே இனங்கண்டு கொண்டபடியால்தான், 1958ம் ஆண்டு தமிழரசுகட்சியின் வவுனியா மாநாட்டின்போது மேடையில் வந்திருந்த மசூர்மவ்லானாவை கழுத்தை பிடித்து வெளியே தள்ளிவிட்டவர் அமரர் வன்னியசிங்கம். அந்த மாநாட்டு மேடையில் பேசுவதற்கு மசூர்மவ்லானாவை கடைசிவரை அமரர் வன்னியசிங்கம் அனுமதிக்கவேயில்லை! நேர்மையில்லாதவர்களும், போலிகளும் பொய்யர்களும் புரட்டர்களும் இயக்கத்திலிருந்து தூக்கியெறியப்படவேண்டும்; இயக்கத்துக்குள் அவர்களை காலூன்றவிடக் கூடாது என்பதில் கோப்பாய்க்கோமான் வன்னியசிங்கம் மிகவும் உறுதியாக இருந்தவர்.

ஃ

முருகேசு,
வவுனியா

கே: மதவாச்சி போல வவுனியாவை மாற்றுவேன் என்று கூறியிருக்கிறாரே யூ. என். பி. புலேந்திரன். இதன் பொருள் என்ன?

ப: மதவாச்சி சிங்களவர் பெரும்பான்மையாக வாழுகின்ற சிங்களப் பிரதேசம்; வவுனியா தமிழர்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற தமிழ்ப் பிரதேசம்; மதவாச்சியைப்போல வவுனியாவையும் மாற்றுவேன்என்றால்—வவுனியா பிரதேசத்திலும் சிங்களவர்களைக் குடியேற்றி மதவாச்சி போலவே வவுனியாவையும் சிங்கள நாடாக்குவேன் என்பதாக இருக்குமோ?

● கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவேண்டும்.

திருவாளர் குயுக்தியார்
194 ஏ பண்டாரநாயக்க வீதி.
கொழும்பு-12.

## சிங்களமே வெளியேறு

உள்ள வழி ஒன்றேதான் "நம் முன்னோர் ஆண்ட மண்ணை நாமும் மீண்டும் ஆளுவோம். தமிழ் ஈழத்தை விட்டு வெளியேறு சிங்கள ஆட்சி பீடமே'! என்று உறுதியாக இறுதியாகக் கூறுவதே அந்த வழி. இந்தத் தேர்தலை சிங்கள ஆட்சிபீடத்திற்குத் தமிழ் தேசிய இனத்தின் இந்த முடிவை எடுத்துக்கூறும் ஒரு வாக்கெடுப்பாகவே தமிழர் விடுதலைக் கூட்டணி கருதுகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் சிங்கள ஆட்சியிலிருந்து தமிழ் இனம் மீட்சி பெறத் தீர்மானித்துவிட்டது என்பதையே காட்டும்,

எனவே எதிர்வரும் பொதுத் தேர்தலில் இந் நாட்டில் தமிழ்பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் தொடர்பான பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கியதான ஓர் சுதந்திர, இறமையுள்ள, மதச் சார்பற்ற சமதர்ம தமிழ்ழீழ அரசை நிறுவுவதற்குத் தமிழ் தேசிய இனத்தின் கட்டளையைத் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடி நிற்கிறது.

## வாக்காளர் கடமை

தமிழ் தேசிய இனம் தன் சரித்திரத்தின் திருப்பு முனையில் நிற்கிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி மூலம் நாம் கண்ட ஒற்றுமை சிங்கள ஏகாதிபத்தியத்தைச் சிந்திக்கவைத்திருக்கிறது. இக்கட்டத்தில் தமிழ்பேசும் மக்களின் ஏகோபித்த தீர்ப்பு எமது சுதந்திரத்தை பெறுவதற்கு முதல்படியாகத்தேவை. எனவே தனிப்பட்ட வேட்பாளர்கள்மீது கொண்ட விருப்பு வெறுப்புக்களை ஒதுக்கிவைத்து, பிரதேச பேதம், சாதி பேதம், சமய பேதங்களை மறந்து, ஆண்ட தமிழ்த் தேசிய இனத்தை மீண்டும் ஆள வைப்போம் என்ற ஒரே உறுதியோடு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு, தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கு, தமிழ்ழீழச் சுதந்திரத்துக்கு உங்கள் வாக்குகளை அளிக்குமாறு வேண்டுகின்றோம்.

"கோவை மகேசனின் அரசியல் மடல்கள்
தமிழ்ப்படைஞர்களை ஊக்கி எழுப்பி நடத்தும்
வீறுமிக்க போர்க்குரல்கள்!''
—சாலை இளந்திரையன்

இப்பொழுது விற்பனையாகிறது—

சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் எழுதிய

அரசியல் மடல்
(முதலாவது தொகுதி)
— விடுதலைப் பாசறை வெளியீடு —

● தமிழீழ விடுதலைப் போரின் வரலாற்றுத்தொடர்
● தமிழின எதிரிகளுக்கோர் வெடிகுண்டு!
● விடுதலை வீரர்களுக்கோர் படைக்கலன்!

விலை ரூபா. ஐந்து
வியாபாரிகளுக்கு 10 வீதம் கழிவுண்டு

தொடர்பு கொள்க:
கோவை மகேசன்
194 ஏ, பண்டாரநாயக வீதி, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# களை பிடுங்குவோம்!

கங்கை கொண்டவன்—கடாரம் வென்றவன் — ஒரு மொழி வைத்து உலகாண்டவன்—இமய உச்சியில்கொடி பொறித்தவன்—ஈழம் முழுவதையும் கட்டியாண்டவன்—சோழ சாம்ராஜ்யத்தின் சொந்தக்காரன் — என்றெல்லாம் தமிழனைப்பற்றி இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன; வரலாறுகள் பேசுகின்றன; இன்றைக்கு இந்தப் பழம்பெருமையை மேடைகளில் எல்லாம் முழங்குகிறோம்!

ஆனல் தனக்கென நாடு அமைத்து — அதில் தலை நிமிர்ந்து அரசோச்சி – உலக நாடுகளையெல்லால் கட்டியாண்டு—புகழின் உச்சியில் வாழ்ந்திருந்த தமிழினம், இன்று நாடற்ற அனுதைகளாய், நலிவுற்று கைபிசைந்து அலைவதின் காரணம் என்ன? எங்கும் அடிமைகளாய், ஆதிக்க மற்றோராய் அடக்கியாளப் படுவோராய் கொடுமைக்குள்ளாவதன் காரணம் என்ன! தமிழன் தன்நாட்டையும் அரசையும் முடியையும் கொடியையும் எப்படி இழந்தான்? ஏழுகோடித்தமிழர் உலகில் இன்று ஏது மற்றோராய் இழிநிலையில் வாழ்ந்திடக் காரணம் என்ன?

இந்தக்கேள்வியை நம்மில் பலரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை!

தமிழன் தனது நாட்டையும் அரசையும் இழந்து இன்று நாடற்ற இனமாக, அரசுரிமையற்றவர்களாக வாழ்வதற்கு ஒரே காரணம்—அன்று முதல் இன்றுவரை தமிழ் சமுதாயத்திலே உடன்பிறந்தே கொல்லும் வியாதிகளும், அற்ப சலுகைகளுக்காக தமிழ் சமுதாயத்தையே விலைபேசிவிற்கும் சுயநலப்பேய்களும், எட்டப்பர்களும் இனத்துரோகிகளும் எக்கச் சக்கமாக மலிந்திருப்பது தான்! தனது வயிற்றை கழுவுவதற்காக, தனது சமுதாயத்தையே காட்டிக்கொடுக்கும் சந்தர்ப்பவாதிகளும் துரோகிகளும் மலிந்ததால் தான்தமிழினம் தாழ்ந்தது—தன்நாட்டைப் பறிகொடுத்து அரசுரிமையை இழந்து அநாதையாகியது.

### தமிழினம் வீழ்ந்ததற்கு தமிழினத்தின் மத்தியில் முளைத்தெழுந்த களைப்புற்கள் காரணமே தவிர வேறு எதுவும் அல்ல!

தமிழ் ஈழத்தில், தமிழினம் தனது இழந்த அரசுரிமையை மீட்கின்ற ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக நாளை நடைபெறுகின்ற தேர்தலைப் பயன்படுத்த தீர்மானித்துள்ளது. தமிழ் ஈழத் தாயகத்தை மீட்டு, அதில் தமிழ் தேசிய இனத்தின் அரசுரிமையை நிலைநாட்டும் ஒரே குறிக்கோளுடன் நாளைய தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிடுகிறது.

இன விடுதலையொன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்துப் போட்டியிடுபவர்கள் யார்? தமிழினத்தை அடக்கியாள முயலும் சிங்களக்கட்சிகள் கூட தமிழ் ஈழத்தின் அனைத்துத் தொகுதிகளிலும் கூட்டணியை எதிர்த்து தங்கள் வேட்பாளர்களை நிறுத்தத் துணியவில்லை; கஞ்சிக்குப் பயறு போட்டதுபோல் ஒருசில தொகுதிகளிலேயே அவை போட்டியிடுகின்றன; அப்படி போட்டியிட்டாலும்; தங்கள் வேட்பாளர்கள் வெற்றிபெற வேண்டுமென்பதிலே சிங்களத் தலைவர்கள் அதிக ஈடுபாடோ அக்கறையோ காட்டவும் இல்லை!

ஆனல் தமிழ்ஈழ சுதந்திரக் கோரிக்கையை முன்வைத்து — தமிழ் ஈழத்தின் சுதந்திரத்துக்காக வாக்குகளை கோரி நிற்கும் கூட்டணி வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிடுபவர்களில் மிகப் பெரும்பாலோர் சுயஇச்சை வாதிகளே. எந்தவித கொள்கை குறிக்கோளோ — கட்டுப்பாடோ—அமைப்போ — இல்லாத பச்சை சுயநல வாதிகளான சுய இச்சைகள் ஏரார்ளமானோர் —தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் பேரியக்கமான கூட்டணியை எதிர்த்து இன்று போட்டியிடுகிறார்கள் என்றால் — தமிழ் சமுதாயத்தின் மத்தியில் இனத்தை விற்கும் கோடரிக்காம்புகள்—இனத்துரோகிகள்—எட்டப்பர்கள் ஏராளமாக மலிந்துவிட்டார்கள் என்பதுதான் அர்த்தமாகும்!

**தமிழ் ஈழ சுதந்திரக் கோரிக்கையை முன்வைத்துள்ள கூட்டணியை எதிர்த்துப் போட்டியிடுகின்ற அத்தனை சுயஇச்சைகளும் தமிழினத்தின் துரோகிகள்; தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்தின் கோடரிக்காம்புகள் என்பதை தமிழ் சமுதாயம் மறந்துவிடக் கூடாது.**

எல்லாத் தொகுதிகளிலிருந்தும் கூட்டணியை வெற்றி பெறச் செய்துவிட்டு—எங்காவது ஒரு தொகுதில் ஓர் ஓட்டை விழுந்து, அதில் சுயஇச்சைகள் தப்பித்தவறி வெற்றிவாய்ப்பு பெற்றுவிட்டாலும் — அது ஒரு குடம்பாலுக்கு ஒரு துளிவிஷம் போலாகிவிடும்; தமிழ் இனத்தின் முதுகில் குத்துவதற்கு தமிழ் சமுதாயத்தை அடிமை கொள்ளுவதற்கு — சுயஇச்சைகள் சிங்கள ஏகாதிபத்தியம் விலைக்கு வாங்கிப் பயன்படுத்திக்கொள்ளக் காத்திருக்கிறது. எனவே நமது விடுதலைப் போராட்டம் வெற்றிப்பாதையில் நடைபோடுவதற்கு தமிழ் ஈழத்திலிருந்து இந்தத் தேர்தலில் சுயஇச்சைகளை — இனவிரோத எட்டப்பர்களை — பூண்டோடு கிள்ளியெறியவேண்டியது — களைபிடுங்க வேண்டியது — வீரசுதந்திரம் வேண்டி நிற்கும் தமிழ் சமுதாயத்தின் கடமையாகும்!

அருளம்பலம்கள், தியாகராசாக்கள், மார்டின்கள், இராசன் செல்வநாயகம்கள், தம்பிராசாக்கள்—இப்படிப் பட்டவர்களை அனுப்பி கடந்த ஏழு ஆண்டுகாலமாக இரத்தக் கண்ணீர் வடித்துவந்த தமிழினம், நாளையதேர்தலில் தமது வாக்குச் சீட்டினுல் மேற்கண்டவர்களையெல்லாம் விரட்டியடிக்க தீர்மானித்துவிட்டது!

**பழைய எட்டப்பர்களை அரசியலிலிருந்து தூக்கியெறியும் அதே சமயம், நடராசாக்கள், குமார்கள், தேவநாயகங்கள் போன்ற புதிய எட்டப்பர்கள் இத்தேர்தலில் தலையெடுக்காமலும் பார்த்துக்கொள்வது தமிழ் சமுதாயத்தின் அதிமுக்கிய கடமையாகும். இல்லாவிட்டால், சட்டியிலிருந்து நெருப்புக்குள் விழுந்த கதையாகவே நிலைமைமாறிவிடும்!**

ஆகவே ஒவ்வொரு தமிழ்பேசும் மகனும் சர்வ ஜாக்கிரதையுடன் தனது வாக்குரிமையை நாளைய தேர்தலில் உபயோகித்து தமிழ் ஈழத்தின் சுதந்திரக்கோரிக்கையை உலகறியச்செய்ய வேண்டும். சிங்கள ஏகாதிபத்தியம் இன்னும் நம்மிடமிருந்து அபகரிக்காமல் இருக்கும் ஒரே உரிமை வாக்குரிமையொன்றே. அந்த உரிமையும் நம்மிடமிருந்து பிடுங்கப்படுவதற்கு முன், விலைமதிப்பற்ற அந்த வாக்குரிமையை பிரயோகித்து தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை மீட்க ஒவ்வொரு தமிழ்பேசும் மகளும் மகனும் சத்தியம் செய்து தமது வாக்குகளை கூட்டணிக்கு அளிப்பார்களாக!

# சுதந்திர தமிழீழம் மலரட்டும் கூட்டணி வெற்றி முழங்கட்டும்!

## நாலரை கோடி தமிழ்மக்கள் விருப்பம் இது!

பெற்ற திருநாட்டை பிறநாட்டான் ஆள — போய்ச் சேர்ந்த நாடுகளில் பிறமொழியாளர் பேயாட்டம் போட—106 நாடுகளில் பரவிக்கிடக்கும் பதினேழரைக் கோடித் தமிழர்கள் பூமிப்பந்திலே புழுக்களாய்—பொட்டுப் பூச்சிகளாய் — புன்மைத் தேரைகளாய் பொருட்படுத்தப்படாமல் மனம் புழுங்கிக் கிடக்கிறார்கள்.

கோடிக் குலம் படைத்து மாற்றானுடன் கூடிக்களித்து காட்டிக் கொடுத்து இனத்தானின் கழுத்தை அறுத்து தமிழ் மானம் மறந்து தன் மானம் துறந்து ஓடிப் பொருள் திரட்டி உண்டுடுத்தி வாழ்வதுவே மெத்தச் சிறப்பென்று மேலான வாழ்வென்று பத்துப் பொருளிருந்தும் பன்னூறு நூலிருந்தும் ஒன்றும் உணர்ந்தறியாமல் ஒண் பெருமை தாமுணராமல் ஆற்றல் குன்றி ஆண்மை நலம் இன்றி மாற்றான் தாள் வருடிடும் மானமற்ற வாழ்வை விரும்பி ஏற்று வீரமிழந்து விவேகமிழந்து சீரிழந்து அடிமை விலங்குகளாய் அலைந்து திரிகின்றார்கள்.


பாம்புக்குப் புற்று உண்டு. பாழான தமிழர்க்கோர் தாயகம் இல்லை. நரிக்கொரு புதர் உண்டு நாடாண்ட தமிழர்கோர் நாடு இன்றில்லை. புலிக்கொரு குகை உண்டு. புவியாண்ட தமிழர்க்கோர் உறைவிடம் இல்லை .குருவிக்குக்கூடு உண்டு. குருதியுள்ள தமிழர்க்கு குந்திப் பேசும் குடிசையும் சொந்த மண்ணில் இல்லை. இருந்தவிடம் தெரியாமல் அழிந்துபோய் செல்லரித்த சுவடிகளிலே தப்பித்தவறி வாழ்ந்து நம் கைக்குக் கிட்டிய நாகரிகப் பெருமை நாம் உணர்ந்தவர்களாக இல்லை. நச்சுக் கருத்துக்களை விரும்பி ஏற்று மெச்சத்தகும் பண்பாட்டை மறந்தோம். ஆரியப் படையின் அணிபுறங்கண்ட நெடுஞ்செழியனின் பின்னவர்கள் ஆற்றலற்ற பேடிகள் என வரலாறு பழிக்குமளவு வாழ்கிறோம். இமய வெற்றியிலே புலிக்கொடி பொறித்த சேரன் செங்குட்டுவனின் சந்ததிகள் மங்கையர் இதழ்க் கடையில் முத்திரை பதிப்பதையே மாவீரம் என மயங்கிக்கிடக்கின்றார்கள்.

மாற்றவேண்டும் இந்த நிலையை! ஏற்றவேண்டும் அறிவொளியை! போற்ற வேண்டும் தமிழ்ப் பண்பாட்டை! புதுக்கவேண்டும் பழந்தமிழர் திருநாட்டை! கருத்தூறும் பாவேந்தன் கவிதைகளை கற்று தெருத்தோறும் தீந்தமிழ் முழக்கம் செய்யவேண்டும் என்று சிங்கள இளைஞர் சிங்கள வெறியரை எதிர்த்து வீறுகொண்டு எழுந்து நின்றிருக்க வில்லையேல் பூமிப்பந்திலே எந்நிலத்தும் தமிழனுடைய போர்க்கொடி உயர்ந்திருக்காது.

தமிழ் ஈழம் உருவாகியே தீரவேண்டும். இது காலத்தின் கட்டளை. யூத இனத்துக்கோர் இஸ்ரேல்! உலகாண்ட தமிழர்க்கோர் தமிழ் ஈழம்! உலகத் தமிழரின் ஒருமித்த எதிர் பார்ப்பு இது!

மாநிலத் தன்னாட்சிதான் கேட்டார் வங்கச் சிங்கம் முஜிபுர் ரகுமான்! மறுத்தார்கள்—நசுக்க நினைத்தார்கள். மக்கள் எழுச்சி தனியாட்சியையே பெற்றுத்தந்தது.

நாலரைக் கோடித் தமிழ் மக்கள் வாழும் தமிழகம் மாநில சுயாட்சி கேட்கையில்—நாலரை இலட்சம் மக்கள் வாழும் புதுவை மாநிலம் முழு மாநிலத் தகுதி கேட்டு போராடுகிறது. நாலரை லட்சம் மக்களின் இருப்பிடமே மாநிலமாக இங்கு இருக்க 35 லட்சம் இருந்தும் தமிழர் மாநிலம் ஏற்படுத்த ஈழத்தில் சிங்கள வெறியர்கள் மறுத்து சினத்தீயை மூட்டிவிட்டார்கள். இன எழுச்சி—இலட்சிய உணர்ச்சி இதனல் பொங்கியெழுகிறது.



தமிழ் நாட்டில் தமிழ்ஈழ விடுதலைக்குரல் எழுப்பும் முன்னாள் இ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. எஸ். மணவைத்தம்பி

சிங்கள வெறியரின் கூச்சல் சிங்கத் தமிழரின் உரிமைக் குரலை ஒரு நாளும் ஒடுக்க முடியாது! தமிழ் ஈழம் உருவாவதை தடுக்கமுடியாது—

தாய்த் தமிழகமும் புதுவை மாநிலமும் பெற்றெடுத்துள்ள தமிழர்கள் நாம் என மார் தட்டிக் கூறி வருகிறோம்! எங்கள் குருதி அணுக்களிலே குடியிருக்கும் கொள்கை மறவர் ஏ. எஸ். மணவைத் தம்பி! உறுதி! உறுதி! தமிழினப் பகை ஒழிவது உறுதி! என்று பரணி பாடி வருகின்றார்! தரணியாண்ட தமிழ் மரபை தட்டி எழுப்ப பட்டி தொட்டிகள் எங்கும் இலங்கைத் தமிழரின் இன வெழுச்சிச் சரித்திரத்தை முழங்கிவருகின்றார். வீர உணர்ச்சியை—விழிப்புணர்ச்சியை இங்குள்ள தமிழர்க்கும் ஊட்டி வருகின்றார்! உரிமைப் பண்ணை மீட்டி வருகின்றார்!

எண்ணற்ற எழுத்தாளர்கள்,இலட்சியச் சிந்து பாடக்கூடிய இளைஞர்கள், கனல் தெறிக்க கருத்துப்போர் புரியக்கூடிய கவிஞர்கள் பாவேந்தன் பிறந்த புதுவை மாநிலத்திலேயே இருக்கிறார்கள். அவர்களின் இதயத் துடிப்பெல்லாம் இலங்கையில் தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றி பெற்றாக வேண்டும் என்றே ஒலிக்கிறது

துரோகத்தின் இசையிலே தமிழர் சிலர் மயங்கிடலாகாது! காட்டிக்கொடுப்பவர்களின் கைச்சரக்கை மெய்ச்சரக்கென்று வாங்கிடக் கூடாது! மான ஈன மற்ற சோற்றுப் பிண்டங்கள் சில சுயநலம்—சுயலாபம் கருதிச் சொல்லி வரும் கட்டுக் கதைகளில் கருத்திழந்து போகக் கூடாது!

பிரிந்து நின்றதாலேயே சோழன் எய்திய சுடர் புகழ் சுக்குநூறாயிற்று! வீழாத தோளான் வியன்சேரன் கீர்த்தி வீணாயிற்று — பகைக் கஞ்சாப்

—8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழு ஞாயிறு எழுக இனிய தமிழ் ஈழம் மலர்க!

"தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாம் சமஷ்டி ஆட்சிகோரி ஒரு காலத்தில் இயக்கத்தை ஆரம்பித்தோம். சமஷ்டி ஆட்சியின் மூலம்நமது இலட்சியத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியாதென இப்போது அறிந்துகொண்டோம்! இந்த அனுபவத்தைக்கொண்டே நாங்கள் பிரிந்துசெல்ல வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். நாங்கள் பிரிந்து செல்லாவிட்டால், எங்கள் இழந்த உரிமைகளை ஒரு போதுமே மீட்க முடியாது!

"எங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்தார்கள். அவர்கள் தங்களுக்கென தங்களது சொந்த அரசை வைத்திருந்தார்கள். இலங்கையின் சரித்திரத்தில் எங்களுக்கு ஒரு இடமிருக்கிறது. நாங்கள் கோருவது உண்மையில் பிரிவினையல்ல; எங்கள் இழந்த அரசுரிமையையே மீளப்பெறவே போராடுகிறோம்.

"போர்த்துக்கீயர் இங்கு காலடி எடுத்து வைத்த போது மூன்று அரசுகள் இங்கு இருந்திருக்கின்றன. அதில் ஒன்று கண்டி அரசு. கண்டி அரசு போர்த்துக்கீயரால் கைப்பற்றப்படவில்லை. எஞ்சிய இரு அரசுகளில், ஒன்று தமிழ் அரசு. தமிழ் ஈழம் முழுவதும், யாழ்ப்பாணத் தமிழ் அரசனால் ஆளப்பட்டது.

"எங்கள் கட்சி ஒரு தனியாட்சியை நிறுவும் நோக்கத்துடன் செயற்பட்டு வருகிறது. இது சுலபமான காரியமல்ல என்பது எமக்குத் தெரியும். இது கஷ்டமான பாதையென்பதை நாம் நன்குக உணருகிறோம். ஆனல் நாங்கள் ஒன்றில் சிங்களவர்களின் ஆட்சியிலிருந்து விடுபடவேண்டும். அல்லது அழியவேண்டும் என்ற சிந்தனையுடனேயே செயற்பட்டு வருகிறோம். இது உறுதியானது. எனவே நாம் முழுவேகத்துடன் செயற்பட்டு எங்கள் அரசை அமைப்போம்!

நாங்கள் சமஷ்டிக்கோரிக்கையை முற்றுகக் கைவிட்டு விட்டோம். எங்கள் இயக்கம் அறவழியிலேயே நடைபெறும். எங்கள்கோரிக்கை நியாயமானதாக இருப்பதால், எதிர்காலத்தில் அது நிறைவேறும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

"அயர்லாந்துக்கு சுதந்திரம் வழங்க முதலில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மறுத்தனர். ஆனல் பல நூற்றுண்டுகள் போராட்டத்தின் பின்னர், அயரிஷ் மக்களுக்கு சுதந்திரம் வழங்க பிரிட்டிஷ் ஆட்சியாளர் இணங்கினர். இன்று வட அயர்லாந்து ஒரு சுதந்திரமான தனிநாடாக விளங்குகிறது.

"நாங்களும் அயரிஷ் மக்களைப்போல் — சுதந்திரமான எங்கள் நாட்டைக் கோருகிறோம். இதற்கு சிங்களவர்கள் இணங்க மறுப்பதற்கு எதுவித நியாயமுமில்லை. ஒரு நாள் எங்கள் கோரிக்கைக்கு சிங்கள மக்கள் இணங்கியே தீரவேண்டிய நிலை ஏற்பட்டே தீரும். நாங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து பிரிந்து எங்கள் தமிழ்ஈழத் தனிநாட்டை அமைத்தே தீருவோம்!"

முப்பது ஆண்டுகளாக தன்னுடைய மூச்சையும் பேச்சையும் சொத்து சுகங்களையும் ஈழத்தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தில் அர்ப்பணித்து -பிரிந்து பிளவுண்டு கிடந்ததமிழ்பேசும் சமுதாயத்தை ஒரு கொடியின் கீழ் ஒரே அணியின் கீழ் கொண்டுவந்து— தமிழ் ஈழத்தின் தேசிய தந்தையாக உயர்ந்து — ஒவ்வொரு தமிழ் மகனின் இரத்தத்திலும், நாடி நரம்புகளிலும் விடுதலை முறுக்கேற்றி — 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களின் இதய சிம்மாசனத்திலும் வீற்றிருக்கின்ற மூதறிஞர் தந்தை செல்வா அவர்கள் 11-9-76ல்சிங்கள ஆட்சிபீடத்துக்கு சவால் விடுத்து தேசிய அரசுப் பேரவையில் நிகழ்த்திய இறுதி உரையே மேலே காணப்படுவது—

"இந்நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளை தங்கள் தாய் நாடாகக்கொண்ட தமிழின மக்கள் தங்கள் உரிமைகளுக்காக நீண்ட காலமாகப் போராடி வருகிறார்கள்; ஒரே நாட்டினராக பெரும்பான்மை இனத்துடன் சேர்ந்து வாழலாம் என்று முயற்சித்து வந்திருக்கிறார்கள். இந்த தமிழ் இனஉரிமைப்போராட்டம் 1972ம் ஆண்டு புதிய அரசியல் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பிருந்தே கடந்த 15 ஆண்டுகளாக—1956ம்ஆண்டிலிருந்து தொடர்ந்துவந்திருக்கிறது. திரு.அமிர்தலிங்கமும்மற்றவர்களும் அன்றிருந்து கடந்த 20 ஆண்டுகளாக தமிழினத்தின் உரிமைகளுக்காக அஹிம்சை வழியிற் தொடர்ந்து போராடிக்கொண்டு வருகிறார்கள்! 1956-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம்தான் இந்நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் விழுந்த முதல் அடியாகும்.

"தங்களுக்கென தனிமொழியும், நிலமும், கொண்ட ஓர் தேசிய இனம் சுயநிர்ணய உரிமை கோருவது ஏதோ ஓர் புதிய விடயமல்ல; உலகில் நடக்காத விடயமுமல்ல; ஒவ்வொரு இனமும் இந்த உரிமையைப் பயன்படுத்த முனைகிறது. அதுவும் தனது அடிப்படை உரிமைகள் அத்தனையும் மறுக்கப்படும் போது, இறுதியில் ஓர் இனம் யாராலும் மறுக்கப்படமுடியாத சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை முன்வைக்கிறது. அந்த நிலையிற்தான் தமிழினமும் இன்று சுயநிர்ணய உரிமையைக் கோரி நிற்கிறது.

"1956ம் ஆண்டு சிங்களம், மட்டும் சட்டத்தின்மூலம் தமிழ் தேசிய இனத்தின் மொழியுரிமை பறிக்கப்பட்டது;சோல்பரி அரசியலமைப்பின்கீழ் குடியுரிமை வாக்குரிமை பெற்றிருந்த மலையகத் தமிழ் மக்கள் பின்னர் வந்த அரசுகளால் அந்த உரிமைகள் பறிக்கப்பட்டு, அரசியல் அனுதைகளாக, நாடற்றவர்களாக ஆக்கப்பட்டாாகள்; தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியத் தாயகத்தில் அரசாங்கம் திட்டமிட்டு சிங்களவர்களைக் குடியேற்றி தமிழ் மக்களை அவர்களது தாயகத்திலேயே சிறுபான்மையாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது. இறுதியாக தமிழ் மாணவர்களின் உயர் கல்வியை பாழடிக்கும் மொழிவாரித் தரப்படுத்தல் திட்டம் புகுத்தப்பட்டு, தமிழ் மாணவர்களின் உரிமை பறிக்கப்பட்டது.

இடபடி நாளிலும், பொழுதிலும் தமிழ் இனத்தின் உரிமைகள் பறிக்கப்பட்டதன் காரணமாக தமிழ் மக்கள் இன்று தங்கள் பிரதேசத்தைத் தாங்களே ஆளும் நோக்கத்துடன் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்கள்.

ஒற்றையாட்சி அமுலிலுள்ள பெல்ஜியத்தில்கூட சிறுபான்மை இனத்தின் பாரம்பரிய தாயகத்துக்குப் பாதுகாப்புண்டு; இங்கு தமிழ் மக்களின் நிலம், அரசின் ஆதரவுடன் கூடிய திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களினல் பறிக்கப்படுகிறது.

இந்திய தேசிய காங்கிரஸ் இந்திய முஸ்லிம்களின் உரிமையை அங்கீகரிக்க மறுத்தனல் அங்கு பாகிஸ்தான் பிறந்ததுபோல இங்கும் தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட காரணத்தினல் விரைவில் தமிழ்நாடு உருவாகியே தீரும். இதை யாராலும் தடுக்க முடியாது."

**—இது ஐம்பது ஆண்டுகளாக தமிழ் ஈழத்து அரசியலில் தமிழ் சமுதாயத்துக்குப் பணியாற்றி — தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா என்று தமிழினத்தை தட்டியெழுப்பிய தனிப்பெருந் தலைவர் அமரர் ஜீ ஜீ. அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக நின்று ட்ரயல் — அற் — பார் நீதிமன்றத்தில் நிகழ்த்திய வீரமுழக்கமாகும். இதுவே அமரர் ஜீ.ஜீ அவர்கள் நிகழ்த்திய இறுதி அரசியல் பேருரையுமாகும்.**

"சுதந்திரமும் சுயாதிபத்தியமும் கொண்ட ஈழத் தமிழ் நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு சிங்கள நாட்டுக்கு கிஞ்சிற்றும் உரிமை கிடையாது. ஈழத்தமிழ் நாட்டு மக்கள் பாரம்பரிய பெருமைக்குரிய இனத்தினர்; ஆண்ட பரம்பரையினர்;இத்தகைய தமிழ்மக்களின் சம்மதத்தைப்பெருமல் சிங்கள இனம்தான் விரும்பியபடி தயாரித்த அரசியலமைப்புக்கு ஈழத் தமிழ் நாட்டு மக்கள் கட்டுப்படவோ பணிந்து போகவோ வேண்டிய அவசியமில்லை; அவர்கள் தங்கள் இறைமையை பிரயோகித்து தமிழ்ஈழ நாட்டைப் புனரமைப்பதற்கு இன்று உறுதி கொண்டு.நிற்கிறார்கள். சர்வதேச சட்டப்படியும், ஐ. நா. சாசனப்படியும் கூட்டுச் சேரா நாடுகளின் 1964ம் ஆண்டுப் பிரகடனப்படியும் ஈழத்தமிழ் மககள் சுயநிர்ணய உரிமைகோருவதற்கு முற்றிலும் தகுதிபடைத்தவர்கள்!"

—இவ்வாறு வரலாற்று ஆதாரங்களையும், சர்வதேச சட்டங்களையும் அள்ளி வீசி, தமிழ்ஈழவிடுதலைக் கோரிக்கைக்கு ஓர் வலுவான அடிப்படையை ஏற்படுத்தித்தந்தார் சட்டமேதை அமரர் திருச்செல்வம் அவர்கள் ட்ரயல்-அற்-பார் வழக்கில் அவர் நிகழ்த்திய மேறபடி வாதம்—ஈழத்தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்துக்கு ஓர் பற்றுக்கோடாகும்; இதுவே அமரர் 'திரு' இறுதியாகத் தந்த அரசியல் தத்துமாவ ாகும்!

நண்மூ அமரர்களாகி விட்ட மேற்கண்ட முப்பெருந்தலைவர்களும் நமக்கு எழுதிவைத்து விட்டுச்சென்ற உயில் இவைகள்தாம்; தனித்தமிழ் ஈழம் அமைத்திடபோராடுங்கள்; அது ஒன்றே நம் இறுதி இலட்சியம்; அது ஒன்றே நம் முடிந்த முடிவு; அது ஒன்றே விடுதலைக்கு வழியென்பது மேற்குறித்த முப்பெருந்தலைவர்களும் அமரத்துவமடைவதற்கு முன் இறுதியாக நமக்கு இட்டுச்சென்ற ஆணையுமாகும்!

தமிழினத்துக்கு இந்த முப்பெருந் தலைவர்களும் இட்டுச்சென்ற கட்டளையின் வழி நின்றுதான்; தமிழர்விடுதலைக்கூட்டணி தனிநாட்டுக்காகப்போராடுகிறது; தனிநாட்டுக்கான அடிப்படை அத்திவாரமாக —சர்வஜன வாக்கெடுப்பாக—நாளை நடைபெறும் தேர்தலைப்பயன்படுத்துகிறது.

**வீர இளைஞன் சிவகுமாரன் 1974 யூன் 5ம் நாள் சுதந்திரத் தாயின் திருவடிகளில் தன்னுடைய உயிரையே காணிக்கையாகத் தந்ததும் — எண்ணற்ற இளைஞர்கள் தங்கள் குருதியைக் கொட்டியதும்—அடியும் உதையும் சித்திரவதையும் பட்டதும்—பசிபட்டினியுடன்,காட்டிலும் மேட்டிலும் மடுவிலும் மலையிலும், கடல் கடந்த நாடுகளிலும் தமது குடும்பங்களையும் உற்றார் உறவினர்களையும்பிரிந்து அலைந்து திரிவதும்-வெங்கொடுமைச் சிறைக்கூடத்தில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் தங்கள் வாழ்வையே கடந்த நாலரை ஆண்டுகளாக அழித்துக்கொண்டதும் — தூக்குக் கயிற்றை முத்தமிடவும் நமது இளைஞர்கள் தயாராக இருந்ததும் — தமிழ் ஈழத்தாயின் புனித சுதந்திரம் ஒன்றுக்காகவே!**

நமக்கென்றோர் சுதந்திர அரசு—தனிநாடு —இருந்திருக்குமானல் 1974ம் ஆண்டு உலகத் தமிழ் மாநாட்டில் தமிழின் சுவை கேட்டின்புற வந்த தமிழ் மங்கையர் மானம் பறிக்கப்பட்டிருக்குமா? ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டிருப்பார்களா? தமிழ்த் தங்கையரின் மஞ்சளும் குங்குமமும் அழிக்கப்பட்டிருக்குமா? இதை ஒவ்வொரு தமிழனும் சிந்தித்துப் பார்க்கவேண்டிய கட்டம் இது.

நமக்கென்றோர் அரசு இருந்திருக்குமானல் —புத்தளம் பள்ளிவாசலில் தொழுகையிலீடுபட்டிருந்த அப்பாவி முஸ்லிம்கள் ஏழு பேர் காரணமின்றி மிலேச்சத்தனமாகச் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பார்களா? நமது சகோதர முஸ்லிம்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருப்பார்களா? அவர்களது சொத்துக்கள் சிங்களவரால் சூறையாடப்பட்டிருக்குமா? இதையெல்லாம் ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் எண்ணிப்பார்த்திட வேண்டிய வேளை இது.

**ஆம் நாளைய பொழுது நல்ல பொழுதாக விடியட்டும்—அது நமது தாயகத்தின் விடுதலையை உலகெங்கும் பறைசாற்றட்டும் — நாளைக் காலை யெழும் எழுஞாயிறு நமது மக்களின் மனங்களிலிருந்து அடிமை இருளை அடியோடு துடைக்கட்டும்! கோடரிக் காம்புகளை, இனத் துரோகிகளை, களைப்புற்களை அடியோடு சுட்டுப் பொசுக்கட்டும்! நாளை வீசும் தென்றற்காற்று சுதந்திரத்தின் இதமான சுகத்தை எமக்குத் தரட்டும்! நாளைக் காலை முழங்குகின்ற கோவில் மணியோசைகள் எல்லாம் புதிய தமிழ் ஈழத்தின் வரவுக்கு மங்கலம் பாடட்டும்! நாளை நமது புனிதமான வாக்குகள் ஒவ்வொன்றும் நமது தாயகத்தின் விடுதலைக்கு— நமது சுதந்திரத்துக்கு—அந்த சுதந்திரத்தின் சின்னமான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு கிடைக்கட்டும்!**

தமிழ் பேசும் மகனே! தன் அடிமை விலங்கறுத்திட தருக உனது வாக்கையெனத் தாயகம் தமிழ் ஈழம் அழைக்கிறது உன்னை! அன்னையின் கைவிலங்கு அறுத்திட கூட்டணி ஒன்றுக்கே கொடு உந்தன் வாக்கினை!

**உன் அன்புத் தோழன்,**

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மலையகம்: தொண்டமான்
# கொழும்பு மத்தியில் செல்லச்சாமி!

## இருவரது வெற்றியையும் தடுக்கயாராலும் முடியாது!

கொழும்பு மத்தியில் இ. தொ. கா. வேட்பாளராக தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஆதரவுடன் போட்டியிடும் திரு. எம். எஸ். செல்லச்சாமி அவர்களுக்கு நாலாபுறமிருந்தும் பேராதரவு பெருகிவருகிறது. இம்முறை கொழும்பு மத்தியில் திரு. செல்லச்சாமி ஒரு புதிய சாதனையை நிலைநாட்டப்போவது இப்போது உறுதியாகிவிட்டது. பெரும்பாலான முஸ்லிம்களும் இம்முறை திரு. செல்லச்சாமிக்கே வாக்களிப்பது என்று முடிவு செய்துவிட்டார்கள்.

கொழும்பு மத்தியில் வாழும் தமிழ்பேசும் மக்களிடையே இம்முறைத்தேர்தலில் புதிய கலகலப்பும் சுறுசுறுப்பும், உற்சாகமும், ஒற்றுமையும் ஏற்பட்டிருக்கிறது எமது உரிமையை நாம் இந்த முறைபயன்படுத்தியே தீரவேண்டும்; எமது ஒற்றுமைப்பலத்தினால் எமது பிரதிநிதித்துவத்தைப் பெற்றேயாகவேண்டும்; என்று தமிழ்பேசும் இளைஞர்கள் உற்சாகத்துடன் திரு. செல்லச்சாமியின் வெற்றிக்காகப் பணியாற்றி வருகிறார்கள்.

தமிழ் ஈழத்துக்குவெளியே வாழும் சுமார் 15 இலட்சம் தமிழ்பேசும் மக்களுக்காக பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதற்கு ஆக இரண்டே இரண்டு பேர் மட்டுமே போட்டியிடும் வாய்ப்பு கிடைத்துள்ளது. மஸ்கெலியா — நுவரெலியா தொகுதியில்போட்டியிடும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எஸ். தொண்டமான் ஒருவர் மற்றவர் கொழும்பு மத்தியில் போட்டியிடும் திரு. எம். எஸ். செல்லச்சாமி. இந்த இருவருமே தமிழ்ஈழத்துக்கு வெளியே போட்டியிடுகின்ற வேட்பாளர்களாவர். இவர்களில் 10இலட்சம் மலையகத் தமிழர்களின் சார்பில் போட்டியிடும் திரு. எஸ். தொண்டமான் அவர்கள் மிகப் பெரும்பான்மையான வாக்குகளினால் மஸ்கெலியா நுவரெலியா தொகுதியில் வெற்றிபெறுவது நிச்சயமாகிவிட்டது. யூ. என். பி. காடையரின் பயமுறுத்தலுக்கோ, சிறீலங்கா குண்டர்களின் மிரட்டலுக்கோ பின்வாங்காது திரு. தொண்டமானுக்கு மிகப் பெரியவெற்றியை ஈட்டிக் கொடுக்க மலையகத் தமிழ் மக்கள் தயாராகிவிட்டனர்.

இதேபோல கொழும்பு மத்தியில் போட்டியிடும் திரு. எம். எஸ். செல்லச்சாமி அவர்களுக்கும் வெற்றி வாய்ப்பு தெரிய ஆரம்பித்துவிட்டது. கொழும்பில் வாழும் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்களுக்கு கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி, கொழும்பு மத்தியில் எப்படியும் பிரதிநிதித்துவத்தை பெறவேண்டுமென்ற உரிமை உணர்வுடன் தமிழ்பேசும் இளைஞர்கள் உழைத்து வருகிறார்கள்.

செல்லுமிடமெங்கும் திரு. செல்லச்சாமிக்கு தமிழ் பேசும் வாக்காளர்கள் காட்டிவரும் அன்பும் ஆதரவும் அனைவரையும் புல்லரிக்கச் செய்கிறது. தாமும் தமிழ்பேசும் மக்களே என்ற உணர்வுடன், சிறுபான்மை மக்கள் ஒரே யணியில் ஒன்றுதிரண்டு நின்றாலே பாதுகாப்பு என்பதை உணர்ந்து முஸ்லிம் மக்களும் திரு. செல்லச்சாமிக்கே இம்முறை ஆதரவு தெரிவித்து, அவருக்காக உழைத்துவருகிறார்கள்.

ஏழைகள் தொண்டன் — தொழிலாளர் தோழன் — சாதாரண மக்களின் பிரதிநிதி — குடிசை வாழ் மக்களின் நண்பன் — திரு. செல்லச்சாமிக்கே ஆதரவு திரண்டுவருகிறது. கிடைத்த வாய்ப்பை வழுவவிடாமல்— — திரு. செல்லச்சாமிக்கு வெற்றி சேர்த்து — தமிழ் பேசும் மக்களின் பலத்தை காட்டவேண்டுமென்று தமிழ் இளைஞர்கள் சபதமெடுத்து கடுமையாக உழைத்துவருகிறார்கள். மத்திய கொழும்பிலும் நுவரெலியாவிலும் தமிழினத்தின் விடிவுக்கு நாளை சேவல் கூவப்போவது நிச்சயம்.

---

### தமிழ்ஈழ ஆட்சியில்!....

● தமிழ் ஈழத்தில் அதிகாரம் பரவலாக்கப்பட்டு எந்தப் பிரதேசத்தவரோ மதத்தவரோ ஏனையோர் மீது அதிகாரம் செலுத்த இயலாத வகையில் அவ்வப்பகுதி மக்களின் சுயாட்சிக்கு வழிவகுக்கும் சுவிட்சர்லாந்து தேசத்திலுள்ளதுபோன்ற இணைப்பாட்சி முறை கைக்கொள்ளப்படும். குறிப்பாக தமிழ் ஈழத்தின் அங்கமான முஸ்லிம் மக்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து செல்லும் உரிமையுள்ள ஓர் சுயாட்சி மாகாணமாகத் தாம் பெரும்பாலாக வாழும் பிரதேசத்தில் அமைக்கப்படுவர் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உத்தரவாதம் அளிக்கிறது.

● தமிழ் ஈழத்தில் தமிழ் மக்கள் பெரும்பாலாக வாழும் பகுதிகளில் முஸ்லீம் மக்களையோ, முஸ்லீம் மக்கள் பெரும்பாலாக வாழும் பகுதிகளில் தமிழ் மக்களையோ குடியேற்றுவதன் மூலம் பெரும்பான்மையினரைச் சிறுபான்மையினமாக்கும் எத்திட்டமும் இடமளிக்கப்படமாட்டாதென்று தமிழர் விடுதலைக்கூட்டணி உத்தரவாதம் அளிக்கிறது.

● தமிழ் ஈழத்தில் சாதி ஒழிக்கப்படுவதோடு கொடிய தீண்டாமையும் பிறப்பினால் மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பிக்கப்படும் அநீதியும் வேரோடு களையப்பட்டு அதை எவ்விதத்திலும் அனுட்டிப்பது சட்டத்தினால் கடுமையான தண்டனைக்குள்ளாக்கப்படும்.

● தமிழ் ஈழம் மதச் சார்பற்ற அரசாக இருக்கும். அதே நேரத்தில் அங்கு வாழும் மக்களினால் அனுஷ்டிக்கப்படும் மதங்கள் எல்லாவற்றிற்கும் சமமான பாதுகாப்பும் உதவியும் வழங்கப்படும்.

● தமிழ் ஈழ ஆட்சிமொழியாகத் தமிழ் இருக்கும். அதே நேரத்தில் அங்கு வாழும் மக்களினால் அனுஸ்டிக்கப்படும் மதங்கள் எல்லாவற்றிற்கும் சமமான பாதுகாப்பும் உதவியும் வழங்கப்படும்.

● தமிழ்ஈழ ஆட்சிமொழியாகத் தமிழ் இருக்கும். அதே நேரத்தில் தமிழ் ஈழத்தில் வாழக்கூடிய சிங்கள மக்கள் தம் மொழியில் கல்வி கற்க, அரசுடன் கருமம் ஆற்ற உள்ள உரிமை பாதுகாக்கப்படும். அதே போன்று சிங்கள அரசின்கீழ் வாழக்கூடிய தமிழ்ப்பேசும் மக்களின் மொழி உரிமைகளுக்கும் அவ்வரசிடம் உத்தரவாதம் நாடப்படும்.

---

## தமிழீழப் பொதுத்தேர்தலில் தமிழ கிறிஸ்தவர்களின் பங்கு!

நாளை நடக்க இருக்கும் பொதுத்தேர்தலில் தமிழன் சரித்திரத்தில் ஒரு முக்கியம் வாய்ந்த நிகழ்ச்சி. அவனது பிற்காலத்தை நிர்ணயிக்கும் ஒரு பெரும் பரீட்சை. தமிழன் சுதந்திரமடைய அவன் எடுத்து வைக்கும் முதற்படி. நாம் தொடுக்கவிருக்கும் விடுதலைப் போர் எப்படியாக ஒரு பரிசுத்தமான செயலாக இருக்கின்றதோ அதேபோல் இத்தேர்தலும் தமிழனைப் பொறுத்தவரையில்பரிசுத்தமான செயலாக இருக்க வேண்டும். இத்தேர்தலை அரசியல் நோக்குடன் கணிக்காது சுதந்திர விடுதலை நோக்குடன் கணிக்க வேண்டும்.

எத்தனையோ சுயநலவாதிகள் தேர்தல் என்றதும் வெளிவந்துள்ளார்கள் — தேர்தல் களத்தில் குதித்துள்ளார்கள். ஒரு ஜனநாயக நாட்டில் எவருக்கும் தேர்தல் களத்தில் குதிக்கும் சுதந்திரம் உண்டு. இதை யாரும் மறுக்கவும் முடியாது —மறுக்கவும் இல்லை. ஆனால் தமிழனது இன்றைய நிலையில் அவனது விடுதலைப் பாதையில் இச்சுயநலவாதிகளின் செயலால் மாசு ஏற்படுகின்றது — களங்கம் ஏற்படுகின்றது. தமிழ்ப் பெரும் மக்கள் இச் சந்தர்ப்பவாதிகளின் அற்ப ஆசைகளுக்கும் தந்திரங்களுக்கும் இடங்கொடுக்கக் கூடாது; முழுமூச்சுடன் இவர்களை எதிர்க்க வேண்டும். இது ஒவ்வொரு தமிழ் கிறிஸ்தவனுடைய புனிதமான கடமை. இப்புனித பணியில் கிறிஸ்தவ குருக்களும் கன்னியாஸ்திரிகளும் பெரும் பங்குகொள்ள வேண்டும். இதுவே அவர்கள் இறைவனுக்குச் செய்யும் பெரும் பணி.

கிறிஸ்து காட்டிய அன்பு வழியில் 'தந்தை செல்வா' வும் சென்றார். அன்பினால் ஈழத் தமிழ் மக்கள் எல்லோரையும் ஒன்று சேர்த்தார். அவர் கட்டியெழுப்பிய தமிழர் ஒற்றுமை முதற் பரீட்சையில் மாபெரும் வெற்றியை ஈட்டியுள்ளது. கடந்த இரு மாதங்களாக பல தொகுதிகளிலிருந்து புயல் பலமாக வீசியது. ஆனால் அன்பு என்னும் சீமெந்து சேர்த்துக் கற்பாறையின் மேற் கட்டி எழுப்பப்பட்ட 'தமிழர் கூட்டணி' எனப்படும் இம் மாபெரும் கட்டடம் அசையாது, தளம்பாது கம்பீரமாக நிற்கின்றது. அக் கம்பீர தோற்றத்திற்கு "தந்தை செல்வா" வளர்த்தெடுத்த இலட்சியப் பிள்ளைகள், திரு. அமிர்தலிங்கத்தின் தலைமையின்கீழ் 'தந்தை செல்வா' காட்டிய அதே அன்பு வழியில் சென்று ஒற்றுமையைக் கடைப்பிடித்து வெற்றியை ஈட்டியுள்ளார்கள். இவ்வெற்றி எதிர்வரும் ஜூலை 21ம் திகதி மாபெரும் வெற்றியாக மாறி தமிழ் ஈழத்தின் ஒற்றுமையையும், இலட்சியத்தையும் எதிரிகளான சிங்களக் குலம் மட்டுமல்ல உலகமே அறியச் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் இதற்காக முயற்சி எடுக்க வேண்டும். இந்த அடிப்படை வெற்றியிற்தான் எமது விடுதலைப்போராட்டம் தங்கியுள்ளது. தமிழ் ஈழத்தை சிங்கள கெடுபிடியிலிருந்து மீட்க, சிங்கள ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிலிருந்து மீட்க, தமிழன் சுதந்திர தமிழனாக வாழ விடுதலைப் போரை நாம் எவ்விதமாக, எவ்வழியில் செயற்படுத்த வேண்டுமென்பதற்கு இறைவன் எங்களை வழிகாட்டி உதவியும் புரிவார். தமிழனை இறைவன் சுதந்திரத் தமிழனாகவே படைத்தார். உலகிலே மிகவும் திறமையான தேன் சிந்தும் தமிழ்மொழியையும், சிறந்த பண்பு, கலாச்சாரத்தையும் தமிழனுக்குகொடுத்தார். ஆனால் இன்று நாம் எங்கள் முன்னோர் செய்த தவறுகளினால் சிங்கள இனத்திற்கு அடிமைகளாகிவிட்டோம். இவ்வடிமைத்தனத்திலிருந்து நாம் விடுதலை பெற வேண்டுமென்பதே இறைவனுடைய சித்தம், அவர் சித்தத்தை நிறைவேற்ற நாம் தகுதிபெற வேண்டும்." ஓர் அடக்கி ஒடுக்கப்படும் இனத்தின் விடுதலைக்கு,—

—முதற் தகுதி, அவ்வினத்தின் ஒற்றுமையை இறைவன் 'தநதை செல்வா' மூலம் தமிழ் இனத்திற்குத் தந்தார். இனி நாம் விடுதலைப் போராட்டத்திற்கு ஆயத்தமாகும் காலம் நெருங்கிவிட்டது. ஒவ்வொரு தமிழ் மகனும், மகளும் இப்புனித போராட்டததிற்கு ஆயத்தமாகவேண்டும்.

ஏற்கனவே கூறியபடி இப்புனித போராட்டத்தின் முதற்படியாக நாளைய பொதுத்தேர்தலில் எமது ஒற்றுமையை உலகறியச் செய்து, விடுதலைப்போரைத் தொடக்குவதற்கு இறைவனது ஆசியையும் பெறுவோம்.

தமிழர் கூட்டணி வேட்பாளர்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் வெற்றி பெறுவது மட்டுமல்ல, அவர்களை எதிர்த்து தேர்தலில் நிற்கும் வேட்பாளர்களின் கட்டுப்பணத்தையும் இழக்கக்கூடிய வகையில் அதிகப்படியானவாக்குகளைப்பெறச் செய்யவேண்டும். இதற்கான முயற்சி எடுப்பதே தமிழ் கிறிஸ்தவனுடைய விசேட பணி. இப்பணியில் உண்மைக் கிறிஸ்தவர்கள் பின்தங்க மாட்டார்களென்பது என் நம்பிக்கை.

"தமிழ் ஈழம் மலர்க"

—யோ. பத்திநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குத் தமிழ் ஈழமெங்கும் பலமாக வீசுகிறது தமிழர் கூட்டணி அலை!

## அனைத்துத் தொகுதிகளிலும் ஆர்க்கிறது வெற்றி முரசம்!

### பொத்துவில்

அம்பாறை மாவட்டத்தில் அமைந்த பொத்துவில் இரட்டைத் தொகுதி தமிழ் மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம். பல பாராளுமன்றத் தேர்தல்களை அம்பாறை மாவட்டத்தில் வாழும் 60.000க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் சந்தித்த பொழுதிலும் தாம் விரும்பிய ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்ய முடியாத துர்ப்பாக்கிய சாலிகளாக விளங்கினர் (சேருவில், மூதூர்த் தொகுதி மக்கள் இம்முறை அனுபவிக்கப் போகின்ற வேதனையை இதற்குமுன் பல முறை அனுபவித்தவர்கள் இவர்கள்.) தமக்குக் கிடைத்த இப் பெரும் வாய்ப்பினை— தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தெரிவு செய்யும் பாக்கியத்தை— பொத்துவில் தொகுதியின் எந்தவொரு தமிழ் மகனும் நழுவ விட ஆயத்தமாக இல்லை.

கொள்கைப் பற்றுக் கொண்ட கனகரெத்தினத்துக்குக் கிடைக்கும் வெற்றி தமக்குக் கிடைக்கும் வெற்றி என்று பொத்துவில் தொகுதி தமிழ் மக்கள் இப்பொழுதே கூறத் தொடங்கிவிட்டனர்.

கூட்டணிக் கூட்டங்களுக்கு திரளும் மக்கள் தொகையும், கூட்டங்களில் கொள்கை முழக்கம் செய்யும் கனகரெத்தினத்தின் ஆவேசப் பேச்சுக்களும், உண்மை விளக்கங்களும் எவர் வந்த பொழுதிலும் கூட்டணியை இத் தொகுதியில் வீழ்த்த முடியாது என்ற நிலை உருவாகிவிட்டது.

### கல்முனை

பொத்துவிலின் அலைக் கரங்களை மிஞ்ச விடமாட்டேன் என்று கல்முனைத் தொகுதியில் கூட்டணி அலை அடிக்கிறது. தமிழனும் இஸ்லாமியனும் தமது நிலையால் ஒன்று என்பதை உணர்ந்து விட்டனர்.

சட்டத்தரணி அஸ்ரப் கொடுக்கும் புள்ளி விபரங்கள், ஆணித்தரமான விளக்கங்கள், திடகாத்திரமானவை. இவர் முஸ்லிம் மக்கள் மத்தியில் மாத்திரமின்றி தமிழ் மக்களின் மத்தியிலும் புகழைப் பெற்று வருகின்ருர்.

ஜனுப் அஸ்ரப்பின் அத்திவாரம் கல்முனை வேட்பாளர் சம்சுதீனுக்கு ஒரு 'கொங்கிறீட்' என்ருல்கூடப் பொருந்தும். இவ் வத்திவாரத்தில் சம்சுதீன் அழகான தேர்தல் மாளிகையை கட்டியெழுப்ப முன்வருவதை யாரும் மறுக்க முடியாது.

மாஜி ஸ்ரீலங்காப் பிரதிநிதியின் ஊரான கற்பிட்டி முனையில் சம்சுதீனுக்கு கிடைத்த வரபேற்பே தமிழ் மக்களை ஒருக்காலும் முஸ்லிம் கூட்டணி வேட்பாளரிடமிருந்து பிரிக்க முடியாது; என்பதைக் காட்டிவிட்டது.

கல்முனை மீண்டும் கூட்டணிக் கோட்டையாகுவதை யாரும் தவிர்க்க முடியாது.

### சம்மாந்துறை

சம்மாந்துறை புதிய தொகுதி. எனினும் பழக்கப்பட்ட வாக்காளர்கள், தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் செறிந்து வாழும் தொகுதிகளில் இதுவும் ஒன்று. அம்பாறைத் தொகுதியை விரிவுபடுத்துவதில் முதலாவது தாக்கப்படும் தொகுதியும் இதுதான்.

சிங்களக் குடியேற்றங்களால் விரக்தியடைந்த முஸ்லிம் தமிழ் வாக்காளர் வாழும் தொகுதி இது. செந்நெல் விளையும் நன்செய் காணிகளைப் பறிகொடுத்து பட்டை தீட்டப்பட்ட மக்கள் வாழும்பகுதியும் இதுதான்.

கூட்டணி வேட்பாளர் சட்டத்தரணி காசிம் அகமது லெவ்வையை மக்கள் இப்பொழுதே கடவுளாக நினைத்து மதிப்புக் கொடுக்கும் காட்சி கூட்டணிக்கு வெற்றி நிச்சயம் நிச்சயம் எனக் கூறியுள்ளது.

### பட்டிருப்பு

பட்டிருப்பு தொகுதியின் வெற்றிக்கு ஆருடமே தேவை இல்லை. பட்டிருப்பில் கூட்டணி வேட்பாளர் என்ருே வென்று விட்டாரே என ஈழத் தமிழகமெங்கும் கதைத்துக் கொள்ளும் சொல்லே கூட்டணி அலை இங்கே மிக வேகமாக வீசிக்கொண்டிருக்கிறது என்பதை தெளிவாக்குகின்றது.

ஏறத்தாள தனித்தமிழ் தொகுதியான பட்டிருப்பில் தான் தமிழரசுத் தலைவர் உருவானுர். மக்களுக்கோர் மாணிக்கமாக விளங்கிய இராசமாணிக்கத்தின் அரவணைப்பில் மக்கள் சாதி, மதம் கடந்து கட்சியில் ஊறித் திளைத்திருந்தனர்.

தன்மானத் தமிழ் மக்கள் வாழும் தமிழீழத்தைப்— புனித பூமியை — படுவான் கரையை பறிக்கப்பார்க்கும் சதிகளை முறியடிக்க, ஒரு செயல் வீரன் வேண்டும் என கணேசலிங்கத்தின் பின் துடித்து நிற்கும் வீரர் கூட்டத்தை காணமுடிகின்றது.

அரசியல் அறிவுபடைத்த மக்களுக்கேற்ற சாணக்கியனுகவும் செயல் வீரனுகவும் விளங்கும் கணேசலிங்கம் எல்லாத் தமிழனுக்கும் அண்ணனுக விளங்குவதும் அவர் வெற்றிப்படிகளில் வீறு நடை போடுவதைக் காட்டுகின்றது.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதி. கூட்டணி தோற்று அறியாத மீன்பாடும் தேனுடு இது. இங்கு கூட்டணி அலைக்கு பஞ்சம் எப்படி இருக்கப் போகிறது கூட்டணி அலை அலைதான். அலையின்பின் அலையாகமோதிக்கொண்டே இருக்கிறது. ஆனுல் இந்த அலைகளின் ஒரு வேடிக்கை: ஒரே அலை எதிரும் புதிருமாக பாய்ந்து மேலோங்கி தாக்கி மடிந்து அடிக்கிறது.

ஒரே அலை எதிர்த்திசைகளில் தன் சக்திகளை வீணடிக்கும் பொழுதுதான் 'பாவம்' என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனுல் ஏதோ ஒரு கூட்டணி அலைதான் இங்கு நிச்சயம் முதலாவது இடத்தைப் பிடிக்கப்போகிறது என்பது நிச்சயம்.

இங்கு கூட்டணி வேட்பாளராகப் போட்டியிடும் இருவரில் ஒருவர் உதயசூரியன் சின்னத்திலும், மற்றவர் வீடுசின்னத்திலும்போட்டியிடுகிருர்கள்.

இம்முறை இங்குள்ள விசேடம் என்னவென்ருல் [illegible] விரல் விட்டு எண்ணக்கூடியவர்களைத்தவிர ஏனையோர் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

### கல்குடா

கற்குடா தொகுதியின் பழம்பெரும் அரசியல் வாதியை வீழ்த்தும் மக்கள் பலம் படைத்த கூட்டணி வேட்பாளர்தான் சம்பந்தமூர்த்தி. இளைஞர், அனுபவத்தில் புதியவர்.

யூ. என். பி. ஆட்சிக்கு வந்தால் அரை அல்லது முழு மந்திரிப்பதவி தனக்குக் கிடைக்குமென்ற நப்பாசையில் தப்புக்கணக்கு போட்டுக்காட்டும் எதிரணி வேட்பாளரின் செல்வாக்கு பல வகையில் குறைந்துவிட்டது.

இயக்கமில்லாத கட்சியின் தொண்டர் என்று இதுகால வரை இருந்த எண்ணம் இம்முறை இல்லை. துடிப்புள்ள இளைஞர், நாளைய சமுதாயத்தைக் கட்டி எழுப்பக்கூடியவர், கூட்டணி வேட்பாளர் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் ஊறிவிட்டது.

தமிழன்னைக்கு தியாகங்கள் பல புரிந்து முன்னணியில் நிற்கும் கல்குடா தொகுதி மக்களை எவ்வழியாலும் இம்முறை யூ. என். பியினுல் ஏமாற்ற முடியாது. உதயசூரியன் அங்கு உதித்தே தீருவான்.

### திருகோணமலை

தமிழ் ஈழத்தின் தலைநகர் திருகோணமலை என்றும் கட்சிப் பற்றுக்கொண்ட தமிழ் மக்களைக் கொண்டது இத் தொகுதி. "தமிழ்" என்ற சொல் இம் மக்களுக்கு தாரகை மந்திரம். இம் மந்திரத்தில் கட்டுண்ட மக்கள் தமிழர் விடுதலை இயக்கத்தை என்றும் தோல்வி காண வைக்கவில்லை; பதிலாக ஒவ்வொரு தேர்தல்களிலும் வெற்றிவாகை சூட்டிவைத்தவர்களே.

கூடுதலான வாதப் பிரதிவாதங்களுக்கு உள்ளாகியிருந்தது இத்தொகுதியே. வேட்பாளர் தெரிவின்போது எரிமலையாகத் திருமலை குமுறியது. ஆனுல் இன்ருே அனைவரும் கூட்டணியின் பின்னுல் திரண்டு நிற்கின்றனர்.

"சிங்கள மக்கள் திருமலையில் வாழ்வதற்குத் தடையில்லை ஆனுல் திருமலை தமிழ் ஈழ மண் என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது" என்னும் வேட்பாளர் சம்பந்தரின் கொள்கைப் பிரகடனம் நாளை மலரவிருக்கும் ஈழத்தின் தலைநகரில் இருந்து எழும் காலை முரசொலி என நாம் கொள்வோம்.

### மூதூர்

இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்த மூதூர் இன்று ஓரங்கத்தவர் தொகுதி. முஸ்லிம் அங்கத்தவர் ஒருவரே வரக்கூடியதாக இத் தொகுதி பிரிக்கப்பட்டுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கைப்படி பெரும்பான்மையாக முஸ்லீம்கள் வசிக்கும் மூதூருக்கு வேட்பாளராக மக்கீன் நிறுத்தப்பட்டுள்ளார்.

அரசியல் பழிவாங்குதலுக்கு உட்படுத்தப்பட்ட ஆசிரியர் மக்கீன்; பழிவாங்கிய அரசியல் வாதியையே அரசியலில் தூக்கி எறியும் அளவுக்கு வளர்ந்துவிட்டார்.

தங்கத்துரையின் வழி நடத்தலும் மக்கீனது தளராத முயற்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மூதூரில் வெற்றி நிச்சயமே எனப் பறைசாற்றி நிற்கின்றன.

—சற்புத்திரன்

---

## குமார் பொன்..

—2-ம் பக்கத் தொடர்

நாதன், தங்கத்துரை — இப்படி எத்தனையோ அருந் தலைவர்களுக்கு நியமனம் வழங்க முடியவில்லை. அவர்களோடு ஒப்பிடும்போது இவர் எம் மாத்திரம்? அவர்களும் இவரைப்போல் கூட்டணிக்கு எதிராக போர் தொடுக்கிருர்களா? போட்டியிடுகிருர்களா? (கைதட்டல்)

தம்பி கூட்டணிக்கு எதிராகம் பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்திப் பேசினுர். நான் அதற்கெல்லாம் இங்கே பதிலளிக்க விரும்பவில்லை. இது அந்த நோக்கத்துக்காக அமைக்கப்பட்ட மேடையுமல்ல. ஆனுல் கூட்டணிமீது இத்தனை குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியவர் —கூட்டணி பற்றி இப்படியான அபிப்பிராயம் வைத்திருப்பவர் எதற்காக நண்பர்களே கூட்டணியிடம் நியமனம் கேட்டார்? (பலத்த கைதட்டல்) இவர் எப்படியானவர் என்பதை முன்கூட்டியே உணர்ந்து கூட்டணி இவருக்கு நியமனம் வழங்காமல் விட்டது எவ்வளவு புத்திசாலித்தனம் என்பதை இப்பொழுது உணர்கிறீர்களா? வணக்கம்.

(குமார் மேடையைவிட்டு இறங்கி தமது ஆதரவாளர்களுடன் வெளியேறுகிருர். பலத்த கைத்தட்டலும் ஆரவாரமும்.)

அமிர்:- இரண்டு தலைவர்களுடைய வாதங்களையும் கேட்டீர்கள் விவாத மேடை ஒழுங்கு முறையின்படி தம்பி குமார் மீண்டும் பத்து நிமிடங்கள் நண்பர் சிவசிதம்பரத்துக்குப் பதிலளித்துப் பேசவேண்டும். ஆனுல் அவர் அதைப் பயன்படுத்தாமல் போய்விட்டார்.

நான் இங்கே தீர்ப்பு என்று எதுவும் சொல்ல வரவில்லை மக்களிடமே அதை விட்டுவிட விரும்பினேன். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பாக இருக்கும்போது இந்த அமிர்தலிங்கத்தின் தீர்ப்பு எதற்கு? இங்கே மக்கள் தீர்ப்பு யார் பக்கம் இருந்தது என்பதை அறிவேன்(கைதட்டல்) 21-7-77ல் உலகம் அதை அறிந்து கொள்ளும்!,'

---

## தமிழ் ஈழம்— விடுதலைக்கு வழி


தமிழ்த்தேசிய இனம் தனக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையை உபயோகித்து தன் பூரண இறைமையை தனது தாயகத்தில் நிலைநாட்டத் தீர்மானிக்கவேண்டும். அந்த தீர்மானத்தை சிங்கள அரசும் உலக நாடுகளும் அறியச் செய்வதற்கு ஒரே வழி இத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களிப்பதேயாகும். அவ்வாக்கைப் பெற்றுத் தெரிவு செய்யப்பெறும் பிரதிநிதிகள் இலங்கைத் தேசிய அரசுப் பேரவை உறுப்பினராக இருக்கும் அதே நேரத்தில் தமிழ்ஈழத் தேசிய மன்றமாக அமைந்து தமிழ் ஈழத்திற்கு ஒரு அரசியல் அமைப்பை ஆக்கவும், அதை நடைமுறைப்படுத்துவதன்மூலம் தமிழ்ஈழ சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கு சமாதான வழிகள் மூலமோ நேரடி போராட்டங்கள் மூலமோ இயக்க மூலமோ நடவடிக்கை எடுப்பார்கள்.

தமிழ் ஈழ தேசிய மன்றம் தமிழ் ஈழத்தின் பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் நிலப், பாதுகாப்பு, கல்வி வளர்ச்சி முதலிய சகல துறைகளுக்குமான திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்தும்.

தமிழ்ஈழ விடுதலையைக் காண்பதற்கு சர்வதேச ஆதரவைத் திரட்டவும் அவற்றை சரியாக பயன்படுத்தி விடுதலையை துரிதப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைத்தளை உடைந்திட உங்கள் வாக்கு கூட்டணிக்கே!




# தனிப்பட்ட காரணங்களை மறந்து கூட்டணிக்கே வாக்களியுங்கள்!

## ஈழத்தமிழர் கழகம் வேண்டுகோள்!

**நாளை** நடைபெறும் பொதுத்தேர்தலின் முடிவை வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் மிக ஆவலோடு எதிர் பார்க்கிருர்கள். ஈழத்தமிழர்கள் வேண்டுவது தமக்கென்ருெரு தனிநாடு. இந்த முடிபு தமிழர்களுடைய ஏகோபித்த முடிபு என்பதை உலகறியச்செய்ய வேண்டும். ஆகையால் நடக்கவிருக்கும் பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர்கள் அனைவரையும் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியடையச் செய்வது தமிழ்மக்களுடைய தலையாய கடமையாகும்.

தமிழர் விடுதலைக்கூட்டணியல்லாத வேட்பாளர்களுக்கு அளிக்கப்படும் வாக்குகள் தமிழர்களின் தனிநாட்டுக்கோரிக்கையை ஆதரிக்காத தமிழ் மக்களும் ஈழத்தில் வாழ்கிருர்கள் என்ற தப்பான அபிப்பிராயத்தை வெளிநாடுகளில் உண்டாக்கிவிடும்.

ஆகவே, தமிழ் பேசும் பெருமக்களே! உங்கள் தொகுதிகளுக்கு நிறுத்தப்பட்டிருக்கும் கூட்டனி வேட்பாளர்களில் உங்களுக்குள்ள தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை மறந்து ஒவ்வொரு வேட்பாளரையும்பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியடையச்செய்யுங்கள்.

வெளிநாடுகளில் ஈழவிடுதலைக்காகப் பணிபுரியும் இயக்கங்கள் வெளிநாடுகளில் எமது இனவிடுதலையைப்பற்றி பிரசாரம் செய்வதற்கு இப்பொதுத்தேர்தலில் தமிழ்மக்கள் எடுக்கவிருக்கும் தனிநாட்டுத் தீர்மானம் உதவியாயிருக்கும் என்பதை வெகுவினயமாக சுட்டிக்காட்ட விரும்புகிருேம்.

ஆர். மகேந்திரா

இணைச்செயலாளர்
ஈழத்தமிழர் கழகம்
(லண்டன்

● கல்குடாத் தமிழனே உன் பார்வைக்கு:

## தேவநாயகத்தின் இரட்டை முகம்

"சிங்கள மக்கள் எம்மைப் பார்த்து இது உங்களுக்கு சொந்தமான நாடுதான்; வாருங்கள் எம்முடன் சேருங்கள்; எம்மைப்போலவே நீங்களும் நாட்டை ஆளுங்கள் என்று குரலெழுப்புகின்றனரே தவிர எம்மை அவர்கள் ஒதுக்கித்தள்ளவோ அன்றிப் புறக்கணித்து நடக்கவோ இல்லை!"

—இன்றைய யூ, என். பி. தேவநாயகம் (தினபதி 13-7-77)

"ஒரு காலத்தில் ஆட்சி நடத்திய தமிழினம் இரண்டாம் தரப்பிரசையாக்கப் பட்டுவிட்டது. அன்று உருவான சோல்பரி அரசியல் திட்டத்தில் இருந்த உரிமைகள் கூட இன்று அழித்தொழிக்கப்பட்டுவிட்டது. தமிழ் மக்கள் தொடர்ந்தும் சிங்கள மக்களை நம்பத் தயாரில்லை. எனவே தமிழ் மக்கள் தங்கள் விருப்புவெறுப்புகளை மறந்து ஒன்றுபடவேண்டிய காலம் வந்துவிட்டது. சகல தமிழ் தலைவர்களும் தமிழர் கூட்டணி மூலம் ஒன்றுபட்டு உரிமைகளுக்காகப் போராடவேண்டும். ஒவ்வொரு தமிழரும் முதலில் தமிழன் என்ற கருத்தைக்கொள்ளவேண்டும். பின்புதான் கட்சி வேறுபாடுகள்.

—யாப்பாணம் பொதுக்கூட்டத்தில் அன்றைய கூட்டணி தேவநாயகம் பேசியது
—(சுதந்திரன் 23-7-72)

"நான் சிங்களவர்கள் பங்குபற்றும் பல நிகழ்ச்சியில் பங்குபற்றியிருக்கிறேன். அந்த நிகழ்ச்சிகளின்போதெல்லாம், தமிழையும், தமிழரையும் சிறிதும் மதிக்காமல் அவர்கள் ஒதுக்குவதைக் கண்டிருக்கிறேன்.

"சிங்களவருடன் சேர்ந்து வாழலாம் என்று கருதி வந்தவன் நான்; ஆனல்' சிங்களவர்கள் இன்று மொழிவெறிபிடித்து முரண்டுபண்ணுவதைப் பார்த்தால் இனியும் இவர்களுடன் சேர்ந்துவாழமுடியுமா? என்பது சந்தேகமாகிவிட்டது.

—மட்டுநகர் கூட்டத்தில் அன்றைய தேவநாயகம் பேசியது. (சுதந்திரன் 11-6-72)

## தேர்தல் முடிவு ஹேஷ்யங்கள்

* யாழ் தொகுதியில் கூட்டணிசார்பில் போட்டியிடும் திரு. வெ. யோகேஸ்வரன் ஏறத்தாழ 13,000 மொத்த வாக்குகள் பெறுவார்; 6500 அதிகப்படி வாக்குகளினுல் வெற்றியீட்டுவார்.

* உடுப்பிட்டித் தொகுதியில் கூட்டணிவேட்பாளராக போட்டியிடும் திரு. இராசலிங்கம், 10,000 அதிகப்படி வாக்குகளினுல் மிகப் பெரிய வெற்றியீட்டுவார்.

* பருத்தித்துறையில் போட்டியிடும் கூட்டணி வேட்பாளர் திரு. துரைரத்தினம் அவர்கள் 5000பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியீட்டுவார்.

* காவலூர்த்தொகுதியில்போட்டியிடும் பண்டிதர் இரத்தினம் 8000 அதிகப்படி வாக்குகளினுல் வெற்றி பெறுவார்.

* நல்லூரிலும், மானிப்பாயிலும் கூட்டணியுடன் மோதும் சுயஇச்சை வேட்பாளர்கள் அனைவரும் கட்டுப்பணம் இழப்பார்கள்.

* மன்னுரில் திரு. சூசைதாசன் 3000 அதிகப்படி வாக்குகளினுல் வெற்றீயீட்டுவார்.

* புத்தளத்தில் கூட்டணி வேட்பாளர் டாக்டர் இல்யாஸ் 3000 அதிகப்படி வாக்குகள் பெற்று வெற்றியீட்டுவார்.

* மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தொகுதிகளிலொன்றில் கூட்டணி சார்பில் போட்டியிடும் புதிய முகம் ஒன்று அதிசயிக்கத்தக்க வெற்றியையீட்டும்!

சுடர்
CHUDAR

தேர்தல் சிறப்பிதழ்

இப்போது எங்கும் விற்பனையாகிறது!

விலை. ரூ. ஒன்று மட்டுமே

## சுதந்திர தமிழ்...

—4-ம்பக்கத் தொடர்

பாண்டியரின் வீடும் நாடும் பாழாயிற்று!

ஒற்றுமை அற்றதாலேயே உலகாண்ட தமிழினம் முற்றுரிமை இழந்து — முடி இழந்து — கொடி இழந்து— கொற்றமிழந்து கூனிக்குறுகி அடிமையாய் நின்றிட நேர்ந்தது!

இந்த நிலையை மாற்ற— இன்ப ஒழியை ஏற்ற—இலங்கைத் தமிழர்கள் பொதுத் தேர்தல் போர்க்களத்தில தமிழர்விடுதலைக் கூட்டணிக்கு வெற்றி தேடித்தந்து வீடணக் கூட்டத்தின் விலாவெலும்பை ஒடித்து — வீணராம் சிங்கள வெறியரை தோற்கடித்துவெற்றிசங்கை ஊதவேண்டும்! உலகத்தமிழர் இதயங்களில் தேனுக இந்தச் செய்தி பாயும் நாளினை இளந்தமிழர் எதிர் பார்த்து நிற்கின்ருர்!

சுதந்திரன் இதழ்கள் கண்டு எங்கள் குருதி சூடேறுகிறது. ஆசிரியர் மகேசனுரின் அருந்தமிழ்த் தொண்டு நிச்சயம் வெல்லும். நாளைய வரலாறு இதனைச் சொல்லும்.

—நா. நந்திவர்மன்
பி. ஏ. எல். எல். பி;
முன்னுள் தி. மு. க. கொள்கை பரப்புச் செயலாளர்
¼ வெங்கட்டா நகர்
பாண்டிச்சேரி-607001

## மில்க்வைற் செய்தி-இதழ் 19

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மில்க்வைற் மெடிக்கேட்டட்சோப் அல்லது 2 பார் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி செய்தியை பெற்றுக் கொள்ளுங்கள்.

விநியோகப்பகுதி:

மில்க்வைற் சவர்க்கார தொழிலகம்,
த. பெ. எண். 77
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1977ம் வருடம் ஜுலை மாதம் 20-ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org